463

ஸம்புடம் 11
ஸஞ்சிகை 2

ஸ்ரீ:

கர-வூ
மாசி-மீ

2 FEB 1952

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

ஸம்பாதகர்
P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M. A., B. L. சிரோமணி.
(அட்வொகேட்)

ப்ரசுரிக்குமிடம்
நெ. 2. ஆதியப்பமுதலி தெரு, புரசவாக்கம், சென்னை 7.

தனிப்ரதி விலை 0-4-0

FEBRUARY 1952
VOL 11 NO 2.

199530

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	...	20
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]		
2. பெரிய திருமொழி	...	23
[ஸ்ரீ. உப. ஒரகடம் K. ஸுதர்சனாசார்யர், ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]		
3. ஸதுபதேசம்	...	27
[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான் ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]		
4. தேவனைப்பாடும் தீந்தமிழ்வல்லார்	...	30
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]		
5. ஸ்ரீ மாலோல வித்வத்ஸபா	...	32
[ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீக்ருஷ்ணதாததேசிகாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.]		
6. செய்திகள்	...	35
7. பஞ்சாங்க ஸங்க்ரஹம்	...	38
8. ஸ்ரீமாலோலவித்வத்ஸதஸின் 11-வது வார்ஷிகமஹோத்ஸவம்		39
[ஸ்ரீ. உப. வித்வான், ஜோஸ்யம். ரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபிலமடம் திருவள்ளூர்.]		
9. ஸம்பாதகரின் குறிப்புகள்	...	41
10. சந்தா வரவு	...	42
11. சாஸ்த்ராநுபந்தம்		
(1) சாரீரகமும் சரணாகதியும்		
(2) க்ரந்தார்த்த பரிசுத்தி		

[சாஸ்த்ராநுபந்தம் அனுப்பவேண்டுமென்று கடிதம் எழுதிய சந்தாதார்களுக்குமட்டும் சாஸ்த்ராநுபந்தம் அனுப்பப்பட்டிருக்கிறது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 } கர ௵ மாசி ௴ { ஸஞ்சிகை 2

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக, வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(10-வது ஸம்புடம் 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

தயாசதகத்தில் இது 40-வது ச்லோகம். 4-வது தசகத்தில் கடைசி ச்லோகம். அதன் தமிழ், ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநங்களில் விஸ்தரித்துள்ளோம்.

தேவி—ஸ்ரீநிவாஸாநுகம்பே— ஸ்ரீநிவாஸனுடைய தயாதேவியே! த்வயி பஹுமதி ஹீந:—உன்னிடத்தில் வெகுமதியில்லாமல், இஹ ஜகதி—இவ்வுலகில், அந்யாம் கதிம்—வேறொருவர் தயையை, வேறு மார்க்கத்தை, ய:—யவன், ஸம்மந்யதே—பஹுமானிக்கிறானோ, ஸ:—அவன், விபுதஸிந்தௌ—தேவநதியான கங்கை, ஸந்நிகர்ஷே—அருகில், வஹந்த்யாம்—ப்ரவஹித்துக்கொண்டே இருக்கையில், பிபாஸாம்—உண்டான தாஹத்தை, ம்ருகத்ருஷ்ணா வீசிகாபி:—ஜலமோடுவதுபோல் பொய்யே தோன்றும் கானல் வெப்ப அலைகளால், சமயதி—சமநம் செய்பவனைப்போன்றவன், ஸ கலு—அல்லவா பாலைவனமணல்களில் மத்யாஹ்ந வெய்யில் வெப்பத்தில் கானலலைகள் ஜலப்ரவாஹமலைத்தோடுவதுபோலக் காணும். கங்கைக் கரையில் தீவ்ரதாஹமெடுத்தபோது, கங்காப்ரவாஹம் ஜில்லென்று எப்பொழுதும் பூர்ணமாய் ஓடிக்கொண்டே இருக்கையில் அதை விட்டுவிட்டு பாலைவனத்தில் தூரத்தில் தோன்றும் கானல் அலைகளைத் தேடி ஓடுபவன், மான் தேடி ஓடி ஏமாறுவதுபோல வீணே ஏமாறுகிறவனே. 'வாஸுதேவம் பரித்யஜ்ய யோऽந்யம் தேவமுபாஸதே। த்ருஷிதோ ஜாஹ்நவீதீரே கூபம் கநதி துர்மதி:॥' என்ற ரிஷிவசநத்தை இங்கே கவி நினைப்பது திண்ணம். அங்கே தாஹத்தைத் தீர்க்க கங்கைக் கரையில் கிணறுவெட்ட யத்நிப்பதைக் குறித்தது. சாகுந்தலத்தில் 6-வது அங்கத்தில்,

'ஸாக்ஷாத் ப்ரியாமுபகதாமபஹாய பூர்வம்
சித்ரார்பிதாம் புநரிமாம் பஹுமந்யமாந:।
ஸ்ரோதோவஹாம் பதி நிகாமஜலாமதீத்ய
ஜாத: ஸகே! ப்ரணயவாந் ம்ருகத்ருஷ்ணிகாயாம்॥' என்கிற ச்லோகத்தையும், பாமதீ ஜிஜ்ஞாஸாதிகரணத்திலுள்ள இதுபோன்ற வாக்யங்களையும் ஸ்வாமி இங்கே அநுஸரித்திருப்பதை தயாசதகவ்யாக்யாநத்தில் காட்டியுள்ளோம். அங்கே கண்டுகொள்வது.

மேலும்—

க்ருபாத்ருஷ்ட்யா ஸக்ருத் வீக்ஷிதா திவிஷத: ஸ்வம் ஸ்வம்
பதம் புஞ்ஜதே ஹோராநாத்ர பவந்
ஜாதவேதாநு வர்ஷாணி த்ருஷ்ணாயிதாநு।
கிம் வோ தூஷ்ணீம் ஹா க்ருபணதாமய
க்ஷ்ய ஸேவாக்ஷ்யதா, ஸைநாபத்யப்ரார்த்
தாமி ஸதி பவதீ நிவாரணவாரண
வி॥

ஸக்ருத் க்ருபாத்ருஷ்ட்யா—ஒருதரம் உமது கண்ணால், வீக்ஷிதா:—கடாக்ஷிக்கப்பட்ட, திவிஷத:—ஸத்யலோக ஸ்வர்க்காதி ஸ்தாநங்களில் அதிகாரம் செலுத்துபவர், ஸ்வம் ஸ்வம் பதம்—தங்கள் தங்கள் அதிகார ஸ்தாநங்களை, புஞ்ஜதே—அநுபவிக்கிறார்கள். 'த்வயா த்ருஷ்டஸ்தூர்ணம் பஜதி பரமேஷ்டீ நிஜபதம்' என்ற தயாசதகச்லோகத்தை இங்கே நினைக்கவேணும். தங்கள் தங்கள் ஸ்தாநங்களை அவர்கள் அநுபவிப்பதே உம் வீக்ஷணத்தால். ஆகையால் அவர்கள் தயவால் மட்டும் ஒருவருக்கும் பயன் கிடையாது 'ஸக்ருத்த்ருஷ்ட்யா' என்பதால், ஒரு கடாக்ஷம் விழுந்ததுமே பலம் ஸித்தித்து விடுவதால் பலஸித்திக்கு இரண்டாம்தரம் ப்ரார்த்திக்கவேண்டியதில்லையென்று விளக்கப்படுகிறது. 'ப்ரய ஸாஞ்ஜலிக்ஷண:' என்றபடி ஓர் அஞ்ஜலி முத்ரையால் அவன் அபயமுத்ரை ஸித்தித்துவிடுகிறது. ஸித்தித்துவிட்டதை ஸாதிப்பதற்காக மற்றோர் அஞ்ஜலி வேண்டாம். க்ருதஜ்ஞதாநுஸந்தாநமாகவும் ஸ்வயம்ப்ரயோஜநமாகவும் பிறகுள்ளதனை அஞ்ஜலிகள் வேண்டுமானாலும் செய்ய

லாம். 'இவ்வுக்திமாத்ரமு முண்டறுக்கமாட்டாது ஶரண்யன் க்ருபை' என்ற ஸ்ரீஸூக்தியை நினைக்கவேணும். இதுதான் ஶரணாகதியில் ஸக்ருத்வதத்வமென்று வ்யஞ்ஜநம். ஈஹ—இவ்வுலகில், ஹஹூஜாம்—பூமியரசர்களுக்கு (இஹபோகங்களை விரும்புமவருக்கு) தூஷாயிகாநு—ஆசைப்பட்டதற்கு மேல், சுஜிதாநு ஹோதாநு—வேண்டிய போகங்களையெல்லாம், வஷாவி—தந்து போஷிக்கிறீர். (ஆகையால் ஆசைப்பட்ட போகங்களுக்காக இரண்டாம் தரம் கோரவேண்டியதில்லை) கிஞ்—மேலும். உடிஞுடிநஹ—மேல்தூக்கும் அநுக்ரஹத்தால், கூவணதாம் ஆலக்ஷ்ய—இவனுடைய கார்ப்பண்யத்தை (ஆகிஞ்சிந்யத்தையும், அநந்யகதித்வத்தையும்)பார்த்து இரக்கம் பெருகி, 'வெயக்ஷ்தஃ—க்ஷம ஜஹெ' என்றபடி 'நாம் என் செய்தோம்' என்று வெட்கப்படும் க்ரமத்தில், நெராஶ்ய வூஹுதீமி—பகவத்ஸம்ச்லேஷம் தவிர மற்றொன்றுமே பிடிக்காததால், பரபக்தி, பரஜ்ஞாநம், பரமபக்தி முதலிய, நிவஹணவவஹணூவி—மோக்ஷ ஸுகம் போன்ற பக்திபர்வங்களையும் இவனுசைப்படுவதற்கு மேலாகவும், ஹவதீ ஷளதி—நீர் பிறப்பிக்கிறீர். இது ப்ரபன்னன் விஷயமாதலால் பரபக்தி முதலியதையும் மேல்வரும் பலபக்தி பர்வங்களையும் பஹுவசநத்தால் குறிக்கிறது. இங்கே 'நிர்ணயம்' என்னும் நிர்வஹணஸந்த்யங்கமென்று காட்டப்பட்டது. 'சநஹூ தாயசுயநம் நிணயஃ வலிகீதிதஃ' என்று அதன் லக்ஷணம். இப்படி மேன்மேலும் பக்திபர்வங்கள் அநுபவத்திற்கு வருவதும் ஸ்வநிஷ்டைக்கு அபிஜ்ஞாநமாகலாம். அது ஸ்வநிஷ்டா நிர்ணாபகம். இப்படி விஷ்ணுபக்தி இக் கார்யஸாதநத்தில் முக்யமான தயாதேவியோடு நடக்கவேண்டிய கார்யஸித்தியைப்பற்றி பேசுவது 'பரிபாஷை' என்னும் அங்கம்.

[சில கோசங்களில் தயாசதகத்திலிருந்து 'ஹவிதரணக்ஷ' என்கிற ச்லோகமிங்கே படித்துள்ளது. அந்தச்லோகத்தில் 'வாவநாம ஶஙோநாஃ' (என்னுடைய பாபங்களுக்கு) என்றுள்ளபடி விஷ்ணுபக்திபாடுவது உசிதமல்ல. ஸ்வாமி தம்விஷயமாக நைச்யாநுஸந்தாநமாக அங்கே பாடியது. இரண்டு ஸம்ஸ்க்ருதவ்யாக்யாநங்களும் இதைப் படிக்கவில்லை. இதற்கு உரைசெய்யவில்லை.]

(முன்புறம் கண்செலுத்தி, ஸந்தோஷத்துடன்)

விவேகமஹாராஜருடைய மாளிகையின் கிழக்குபாகத்தில் அஸுரஶத்ருவான பகவானுடைய தயையால் ப்ரேரிக்கப்பட்டு ஸகல வேதஸ்வரூப வித்யைக்கும், வேதஸம்பந்தமான வித்யைகளுக்கும் ராசிஸ்வரூபரான பக்ஷிராஜர் ஸேவை ஸாதிக்கிறார். ஹர்ஷநர்த்தநம் செய்யும் ஸம்ப்ரமமாகக் காண்கிறார்.

> ஷூநெதஹோதூஹஙெஸந ஸஹீஹஊநஃ
> ரக்ஷோநூவம் நதஹூஹெஷ ரஜா-
> ஸஹாயஃ! ஹாயஃ ஷூஹெஹஷவரஜக்ஷிதி
> வூதிஶகிம் ஸஊவெ வூவஹஸிஷ்தி
> தஹூயொஉஸள ॥

பக்ஷிராஜர் மோக்ஷந்தருவதில் பகவானுடைய ஸந்நாஹம், 'ஸுதர்சநம்' 'மோக்ஷணஸங்கல்பம்' என்றும் பாஞ்சராத்ராகமங்களில் ப்ரஸித்தமென்று மேலே ஒரு ச்லோகத்தால் ஸாதிக்கப்போகிறார். ஜீவரை ரக்ஷித்து வீடுசேர்க்க அபிமுகரான லக்ஷ்மீஸஹாயரான பகவானை ஆச்ரிதர்கள் வீடுகளுக்குத் தன்வேகத்தையெல்லாம் செலுத்தி எழுந்தருளப்பண்ண மிக்க ஆசையுடையவிந்த விஷ்ணுரத கருடன் பகவானுடைய திருவுள்ளத்தை விட்டு என்றுமகலாமல் சத்திரூபமாய்க்குடிகொண்டிருக்கும் மோக்ஷணஸங்கல்பத்தையும் கட்டாயம் அழைத்துவருவார். ஷூநெதம்-பகவானை நம்முடைய ஸமீபத்தில் கொண்டுவருவது 'உபநிஷத்து'. அந்தத் திருநாமமே அதைத் தெளிவிக்கிறது. வேதவேதாந்தஸ்வரூபர் இவர். ஆகாயத்தில் ஶப்தம் ஸஞ்சரிக்கும். இப்பக்ஷிராஜர் ஆகாசத்தில் ஶப்தரூபியாய் லக்ஷ்மீபதியை (வாஹநமாக) சுமந்துகொண்டு த்வரையோடு பறந்துவருபவர். 'அருளாழிப் புட்கடவீ ரவர்வீதி ஒரு நாள்' என்று ஆழ்வார் அஞ்சிறைய மடநாரையில் தூதுவிடுவது.

வேதமெனும் ஶாஸ்த்ரம் ஆயிரம் மாதாபிதாக்களிலும் நம்மிடம் அதிக வாத்ஸல்யமுடையது. வேதஸ்வரூபியான இப் பக்ஷி ராஜருக்கு பகவானை வணங்கியவரிடம் ஸ்ரீய:பதியைக் கொண்டுவர ஆசை; த்வரை. ஶூத்ரஹவெஸ— தன்னுடைய முழுவேகத்தோடும். அந்த வேகம் அவருடையதா? அவருடைய அந்த ராத்பாவுடையது. 'புட்கடவீர்' என்று ஆழ்வார் விளக்குவது. ஸஃஹ்ஹாந:—மிகவும் ஆசைப்பட்டு ப்ரவர்த்திப்பவர். ரக்ஷாநூவ—எல்லா சேதநரையும் ரக்ஷித்து வீடு சேர்க்குமெண்ணம் எப்பொழுதும் தாய்தந்தையர் நெஞ்சிலுளதே. அது ஶக்திரூபமாய் மனத்தில் கிடக்கிறதென்பதை அடுத்த அடியில் ஶக்தி என்பதால் ஸூசிக்கிறார். இப்பொழுது ரக்ஷணத்தில் உந்முகராய் அந்த ஶக்தி கார்யோந்முகமாய் வெளிக்கிளம்பும் அவஸரம். அந்த ஸமயம் பார்த்து இவருடனே வாஹநமாய் ஸஜ்ஜராகி வஹநம் செய்கிறார். நத ஶரணைஷ—ரக்ஷணஸங்கல்பம் ஸகல சேதநர் விஷயமாயிருந்தும், வணங்கினவர் விஷயத்தில் அது உத்புத்தமாகிறது. ஶ்ரீஸஹாயம்—அவள் புருஷகாரம் செய்ய ஸஹாயம் செய்து ரமிக்கிறாள். த்ருடம்—திண்ணமாய்க் (கொணர்வர்). ஹரே:—ஸர்வேச்வரரான ஹரியானதால் அவருக்கு ரக்ஷணஸாமர்த்யம் ஸித்தம். தத்வத்ரயகர்ஷிதிவ்ருத்தி—பிதாவாகிய பகவானுக்கு ரக்ஷண ஆசை என்றுமுளதே. ஆச்ரயணமான நதி—வணக்கம்—எனும் வ்யாஜத்தை மட்டுமெதிர்பார்த்துக் காத்திருக்கிறது. ஶக்தி என்பதற்கு, 'காயெஸ்ரவயொஶ்வத்ரயகர்ஷிஜவிஶெஷண' என்று லக்ஷணம். அதை இங்கே ஸூசிக்கிறார். மேலும் ஶக்தி யோக்யதாமாத்ரமாய் முன்னிருந்தது. இப்பொழுது அது பலம்தருமவஸ்தையை யடைகிறது. ஸஜஜவி—மோக்ஷஸித்தியைத்தரும் ஸங்கல்பத்தையும், (இந்த நாடகத்தில் முக்யபாத்ரத்தை) தத்ரொஸஎ—பகவானுடைய ரதமாகிய இவர் உவஹஸிஷ்ருதி—கொணர்வார்.

இவரைத் துதி செய்யலாம்—

நஃவேளுமநஸாய வெகூணுவஶவதிஸ்ரெநே।
ஶூதிஸிஸஸயொத்ருதஜரொராய—
ஶஸதுதெ ॥

ஹயக்ரீவமந்த்ரத்தை ஸ்வாமிக்குஉபதேசித்தவர், ஹயக்ரீவ ஸாக்ஷாத்காரமடைவித்தவர் இக்கருடாழ்வார். கருடமந்த்ரத்தை ஸ்வாமிக்கு உபதேசித்தவர் அப்புள்ளார். கருடமந்த்ரோபாஸந ஸித்திகளுள்ளவர் அத்யபூர்வர். 'த்ரிவதஶவிஜிதம் வஞுவணீஸ்ரஹஸ்ரு' என்று கருடபஞ்சாசத்தின் 6-வது ச்லோகம். அஹீந்த்ரபுரத்தில் கருடமந்த்ர ஜபம் செய்து கருடஸாக்ஷாத்காராதிகள் கிடைத்தன. அஹிஸ்மரணமும் கருடஸ்மரணமும் சேர்ந்து வருகிறது. கருடபஞ்சாசத்தில் ஓர் ச்லோகம் இதற்கடுத்தது. அதன் பிறகு கருடதண்டக கத்யமே வைக்கப்படுகிறது. கருடபஞ்சாசத்து திருவஹீந்த்ரபுரத்தில் ப்ரத்யக்ஷிதகருடவிஷயமான ஸ்தோத்ரம். அதற்கும் இந்த ஸங்கல்பஸூர்யோதய ரசநத்திற்கும் நடுவில் எத்தனையோ வருஷங்கள் கடந்தன. கருடதண்டகம், பாம்பாட்டியென்பான் ஸ்வாமியை சோதித்த ப்ரகரணத்தில் செய்தருளியது. அதுவும் இந்நாடகரசநத்திற்கு முந்தியதே. தண்டகத்தின் மங்களச்லோகமிது. இதோடு தொடங்கி உடனே நடுவில் கருடபஞ்சாசத்ச்லோகமொன்றைப் படித்துவிட்டு மறுபடியும் கருடதண்டகம் முழுவதும் இங்கே படித்துளது. ப்ரபோதசந்த்ரோதயத்தில் காசிக்ஷேத்ரத்தில் ஆதிகேசவர்கோயிலில் ஆதிகேசவனைப்பற்றி அழகான ஓர் தண்டகம் படிக்கப்பட்டது. காசிக்ஷேத்ரத்தில் ராமதாரகமந்த்ரத்திற்கு மஹிமை. ராமன் விஷயமான ரகுவீரகத்யத்தை ஸங்க்ரஹமாக இங்கே 7-வது அங்கத்தில் படித்தார். காளிதாஸர் ச்யாமளாதண்டகம் செய்ததாக ப்ரஸித்தி. 'வெஜயதீதி வெஜ:' அறியாததை, மற்றொன்றாலும் அறியப்படாததை, பரமக்ஷேமத்திற்காக அவச்யமாக அறியவேண்டிய தத்வங்களை, நமக்கு க்ருபையால் உணர்த்துவது வேதம், வேதபுருஷன். வேதஸ்வரூபியான கருடன்தான் நம்மருகில், நம் புத்தியருகில் பரப்பொருளைக் கொண்டுவரவேண்டும். (தொடரும்)

ஸ்ரீ:

பெரிய திருமொழி

"அங்கண் ஞாலமஞ்ச"

—○—

பெரியதிருமொழி என்பது, ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளென்னும் பூர்வாசார்யரால் வகுக்கப்பட்ட நாலாயிர திவ்யப்ரபந்தத்துள் இரண்டாவது ஆயிரத்துள் முதலாவது ப்ரபந்தம். இது அடைமொழியின்றி 'திருமொழி' என்றும் வழங்கப்படும். 'அங்கண் ஞாலம்' என்னும் இத் தசகம் பெரிய திருமொழியில் முதற்பத்தில் ஏழாம் திருமொழியாகும். நூறு பாசுரங்கள் கொண்ட ஶதகத்தைப் 'பத்து' என்றும், பத்துப் பாசுரங்கள் கொண்ட தஶகத்தைத் 'திருமொழி' என்றும் கூறுவது வைஷ்ணவர் மரபு. இப் பெரியதிருமொழியின் மேன்மையைக் கருதி 'அறிவுதரும் பெரியதிருமொழி' என்று அருளிச்செய்தார் ஸ்வாமி தேசிகன். இப் பெரிய திருமொழி 108-பதிகங்கள் (தஶகங்கள்) கொண்டு 1084-பாசுரங்களையுடையது. இந்த ப்ரபந்தத்துக்கு ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை என்ற பூர்வாசார்யரும், ஸ்ரீ பரகாலஸ்வாமியும் வ்யாக்யாநம் அருளியிருக்கிறார்கள். 'நஞ்சீயர் படி' என்று வேறொரு வ்யாக்யாநமும் இதற்குண்டு. பெரிய திருமொழி என்னும் ப்ரபந்தத்தை அருளிச்செய்தவர் திருமங்கையாழ்வார்.

திருமங்கையாழ்வார் சரித்ரச்சுருக்கம்

தோற்றுவாய்

ஸ்ரீவைஷ்ணவமதத்தில் சிறந்த மெய்யடியார்களெனக் கொண்டாடப்படும் ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்கள்:— (வையகமெண்) பொய்கை, பூதன், பேயாழ்வார், மழிசையர்கோன், (மகிழ்) மாறன், மதுரகவி, (பொய்யில் புகழ்) கோழியர்கோன், விஷ்ணுசித்தன், (பூங்) கோதை, தொண்டரடிப்பொடி, பாணாழ்வார், (ஐயனருட்) கலியன் எனப்படுவர். ஸ்ரீமந்நாராயணனின் திவ்ய மங்கள குணங்களாகிய அமுதவெள்ளத்தில் ஆழ்ந்து மூழ்கிடுபவராதலால் இவர்கட்கு 'ஆழ்வார்கள்' என்று பெயர் வந்தது. இவர்களுள் கலியன் எனப்படும் திருமங்கையாழ்வாரது திவ்யசரித்ரம் கூறப்படுகிறது.

திருவவதாரம்

திருமங்கையாழ்வார் 'கங்கையிற் புனிதமாய காவிரி' நதி பாயப்பெற்ற சோழமண்டலத்தில், திருமங்கையென்னும் நாட்டில், திருவாலி திருநகரி என்னும் திவ்யதேசத்துக்கருகிலுள்ள திருக்குறையலூரில், நான்காம் வருணத்தில் கள்ளர் குடியில், சோழராஜனுக்குச் சேனைத்தலைவனாயுள்ள ஒருவனது குமாரராய், பெருமாளின் சார்ங்கமென்னும் வில்லின் அம்ஶமாய்ப் பிறந்தவர்.

ஆழ்வார் வளர்ப்பும், வித்யாஸாமர்த்யமும், அவர் அரசரானமையும்.

இவர் பிறந்தபோதே மூலமூர்த்திபோல நீலத்திருமேனியுடன் காணப்பட்டமையால், பெற்றோர்கள் இவர்க்கு நீலன் என்ற பேரிட்டழைத்தார்கள். குழந்தையின் தேசும் திறனும் எழிலும் கண்ட பலர்,

'மங்கையா மசன னேன்றும் மாற்றலர் மறலி யென்றும்
மங்கிய வறிஞர் வானத் தலர்ந்தவைந் தருவே யென்றும்
பொங்கிய புலவர் நான்கின் கவிபாடும் புலவ ரேன்றும்

[திவ்வியசூரிசரிதம், சருக்-17, செய். 9]

இவ்வாறு எங்கணும் போற்றிப் புகழ்ந்தனர். நீலனார் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பட்டு வந்தார். உரிய காலத்தில் தந்தை குழந்தைக்கு ஜாதகர்மம் முதலிய சடங்குகளைச் செய்வித்து, மற்ற சௌளம் அந்நப்ராஶநம் முதலிய கர்மங்களையும் நடத்தி, அதை அருமையாக வளர்த்துவந்தார். நீலனார், தமது ஏழாம்பிராயம் தொடங்கிப் பதினேருவயதிற்குள் ஸகல கலைகளையும் குருமுகமாகக் கற்றுணர்ந்தார். அன்றியும், தம் குலத்துக்கேற்ப, இளமையிலேயே ஆயுதவித்தையிலும், யானையேற்றம், குதிரையேற்றம்

முதலியவைகளிலும் தேர்ச்சிபெற்றுச் சோழவரசனையடுத்துச் சேனாபதிஉத்யோகம் வஹித்துவந்தார்.

‘கன்னிறத்த நெஞ்சர்கால படர்களன்ன [கானவர்
வன்னியொத்த விழியரன்றி யிடியிடித்த வார்த்தையர்
பொன்னிழைத்த தனுவினர்...............’
[திவ்யசூரிசரிதம், சருக் 8, செய்-64.]

என்னும் இத்தகைய குணங்கள் வாய்ந்த, நீர்மேல்நடப்பான், நிழலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன் என்னும் நால்வர் இவர்க்கு அமைச்சர்களாக அமைந்தனர். வேற்றரசரோடு கடும்போர் நிகழுங்காலத்து நீலனார் படைத்தலைமை பூண்டு, மேற்கூறிய அமைச்சர் நால்வரையும் துணையாகக்கொண்டு, தமது பராக்ரமத்தால் எதிரிகளைப் புறங்காட்டியோடுமாறு செய்துவந்தார். அதனால் பரகாலன் என்று பெயர்பெற்றார். அரசன் அவரது பராக்ரமத்துக்கும் வெற்றிக்கும் உகந்து, அவர்மீது பேரன்புகொண்டு, அவரைத் திருமங்கைநாட்டுக்கு அரசராக்கினான். அதுகொண்டு ஆழ்வார் மங்கையர்கோன், திருமங்கைமன்னனெனப் பெயர்பெற்றார். தமக்குக்கிடைத்த அந்நாட்டை நீலனார் நன்கு பரிபாலித்துச் செங்கோல் செலுத்தி, உலகஇன்பங்களை அநுபவித்துவந்தார்.

ஆழ்வார் குமுதவல்லியாரை மணந்தது

சோழநாட்டில் திருநாங்கூருக்கருகில் **திருவெள்ளக்குளம்** என்பது ஒரு திவ்யதேசம். அத்திருப்பதியில் அமுதம்போன்ற நீரையுடைய ரமணீயமான ஒரு தாமரைத்தடாகம். அத்தடாகத்தின் பொலிவையும் தெளிவையுங்கண்டு, தேவமாதர் பலர் வந்து, அங்கு ஜலக்ரீடைசெய்து செல்வதுண்டு. ஒரு ஸமயம் தேவமாதரில் ஒருத்தி, தன் தெய்வவடிவத்தை நீத்து மானிட வடிவங்கொண்டு தனியே குமுதமலர் கொய்து நின்றாள். அங்குப் பாகவதோத்தமனான வணிகர் தலைவன்* ஒருவன் உதயத்தில் ஸ்நாநம் செய்யவருகையில் அவளைத் தற்செயலாய்க் கண்டு, அவள் வரலாற்றைவிசாரித்தான். அவனிடம் அவள், ‘ஐய! என்னுடன் வந்த மகளிர் என்னைத் தனியே விட்டுச்சென்றனர்; நீரே என்னைப் பாதுகாத்தருளல் வேண்டும். நான் ‘ஸுமங்கலா’ என்னும் பெயரினள். ஒரு ஸமயம் ஸித்தபுருஷன் ஒருவனைக் கண்டு பரிஹஸித்தேன். ‘நீ ஒரு நீசனுக்கு மனைவியாவாய்’ என்று அவர் ஶாபமிட்டார். அதனால் மனங்கலங்கி மீண்டும் அவரை வேண்டிக்கொண்டேன். அவர், ‘நீ திருமங்கைநாட்டரசருக்கு வாழ்க்கைப்பட்டு அவரைப் பாகவதோத்தமராக மாற்றினால் உன் ஶாபம் தீர்ந்து ஸுகப்படுவாய்’ என்றார். இதுவே என் வரலாறு’ என்று சொல்லிப் பணிந்தாள். குழவியில்லாக்குறையால் வருந்தும் அவ்வணிகன், அவளை மகிழ்ச்சியோடு ஏற்றுத் தன் மனையாள்வசம் ஒப்பித்து, குமுதமலர் கொய்த காரணத்தால் குமுதவல்லி எனப் பெயரிட்டு, அவளை மிக்க அன்போடு வளர்த்துவந்தான். குமுதவல்லியும் பிராயம் முதிர முதிர, பகவத்பக்தியும் பாகவதபக்தியும் விஞ்சி, நற்குணநற்செய்கைகளுடன் விளங்கிவந்தாள்.

காலக்ரமத்தில் அவள் மணப்பருவமடைந்தாள். ‘இவளுடைய ரூபலாவண்யங்கட்கும் மஹாகுணங்கட்கும் ஏற்ற கணவன் வாய்க்கவேணுமே!’ என்று தந்தை கவலைக்கடலில் ஆழ்ந்திருந்தார். நிற்க: இக்குமுதவல்லியாரின் குணநலன்களையும் ஸௌந்தர்யாதிஶயங்களையும் ஒற்றர் சிலர் நீலனாரிடம் கொண்டாடிக் கூறிவந்தனர். உடனே நீலனார் மணவிருப்பால் திருவெள்ளக்குளம்போந்து ‘ஐய! வந்த்யராய் வதியும் உமக்கு இவ்வங்கனை கிடைத்த தெவ்விதம்? என, வணிகர் ‘ஐயா! வழக்கம்போல் நறும்புனலில் நீராடச்சென்றபோது ஒருநாள் அங்கு இவள் தனியே குமுதமலர் கொய்துகொண்டு நின்றாள். இவளை என் இல்லத்திற்கு அழைத்துக்கொண்டுவந்து, கண்வர் சகுந்தலையை வளர்த்துவந்ததுபோல் காதலாய் வளர்த்துவருகின்றேன்; இப்பொழுது இவள் மணப்பருவம் எய்தியுள்ளாள்; தகுந்த வரன் கிடைக்கவேணுமே யென்று தளர்ச்சியுறுகின்றேன்’ என்றார். அதுகேட்டுப் பரகாலர், ‘யான் திருமங்கைநாட்டரசன்; என்னை நீலன் என்பார்

* அந்தணரென்று சில நூல்கள் கூறும்.

19530

கள்; இவளை மணக்கவிழைகின்றேன்; இவளை எனக்கு மனைவியாக்கவேண்டும்' என்று வரித்து ஆடையணிகளை மிகுதியாகக் கொடுத்து வணிகர் தலைவனை வணங்கிக் கேட்டுக்கொண்டார். மகளுக்குத் தக்கவரன் கிடைத்ததெனத் தாய் தந்தையர் மகிழ்வுற்று மங்கைமன்னர்க்கு அவளை மணம் செய்விக்க இசைந்தனர். அப்போது குமுதவல்லி குறுக்கிட்டுக் குறுநகை கொண்டு 'சங்கசக்ர முத்ராதாரணம் திருமண்காப்பு முதலிய திருவிலச்சினையுடைய ஒரு வைணவர்க்கன்றிப் பிறர்க்கு வாழ்க்கைப்படேன்' என்று தன் கருத்தைத் தெரிவித்தாள். அதைக்கேட்ட ஆலிநாடர் அதிவிரைவாகத் திருநறையூர் என்னும் திவ்யதலத்தையடைந்து, அங்கு எழுந்தருளியுள்ள 'நம்பி' என்னும் திருநாமமுள்ள எம்பெருமானை ப்ரார்த்தித்து அவர்பக்கல் திருவிலச்சினையைப் பெற்றுப் பன்னிரு திருமண்காப்பணிந்து, திருமார்பில் திருத்துழாய் மணிமாலை விளங்க, 'திருநறையூர் மாமணியே! நெடுநாளாய் உண்மைப் பொருளை அறியாதிருந்த அடியேனை ஒரு பெண்ணை வ்யாஜமாகக்கொண்டு வைணவனாக்கித் திருத்திப்பணிகொண்டருளிய பரமக்ருபாநிதியான தேவரீர்க்கு அடியேன் என்ன கைம்மாறு செய்யமாட்டுவேன்!' என்று அன்போடு துதித்து, திருமணத்தில் த்வரைகொண்டு மீண்டும் திருவெள்ளக்குளத்தையடைந்தார். அம்மங்கை மீளவும் 'நீர் ஓராண்டளவும் நாடோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அமுதுபடைத்து, அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தத்தையும் போஜநசேஷத்தையும் உட்கொண்டால், உம்மைக் கொழுநராகக்கொள்வேன்; இல்லையேல் உமக்கு வாழ்க்கைப்பட இசையேன்' என்றாள். அந்த வ்ரதத்தையும் தாம் செய்வதாகச் சம்மதித்து அவளிடம் ஶபதம் செய்து கொடுத்தார். பின்னர் இருவர்க்கும் விவாஹச்சடங்கு செவ்வனே நடந்தேறியது. ஸதிபதிகள் இருவரும் மலரும் மணமும்போல் ஒன்றியிருந்து, இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்திக்கொண்டு, அடியார் பூசையையும் அன்புடன் நடத்தி வந்தனர்.

சோழவரசனும் மங்கையரசரும்

'ஶூராய நாநாம் ஸவேஷாம் விஶோரா ராயநம் வரூ | தஸ்மா தந் தரம் ஷ்ராகதம் ததீயாராயநா வரூ ||'

என்னும் பொன்மொழியின் பொருளை நன்கறிந்தவரான பரகாலர், பகவதாராதநத்தினும் மேம்பட்டதான பாகவதாராதநத்தைச் செய்துகொண்டு வருநாளில், நாளாவட்டத்தில் பொருள்முட்டுப்பாடு நேரவே, வேறு பொருளைக்காணாது சோழவரசனுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருளைத் ததீயர் விஷயத்தில் செலவிட்டுவரலானார். இதனையறிந்த சோழன், தனது திறைப்பணத்தைவாங்கிவருமாறு ஓர்ஏவலாளனை அவரிடம் அனுப்பினான். அவனிடம், கடன்காரர்களுக்குச் சொல்வதுபோலவே பல தவணைகளைச் சொல்லியனுப்பிவிட்டார். பரகாலர். தன் முயற்சி பயன்படாமை கண்ட சோழன், ஒரு சேனைத்தலைவனை விளித்து மங்கைமன்னனைத் தன்பால் பிணித்துக் கொணருமாறு பணித்தான். அவன் பல சேனைகள் புடைசூழக் கொதித்துச் சென்று, இவரைச்சூழ்ந்து பிடிக்கத்தொடங்க, இவர் 'ஆடல்மா' என்ற பரிமீதிவர்ந்து, அச் சேனாபதியையும் படைவெள்ளத்தையும் பறக்கவடித்தார். இச் செய்தியைச் சோழமன்னன் உணர்ந்து, தானே பல்வகைப் படைகளுடன் மங்கைமன்னனைச் சூழ்ந்துகொண்டான். இருவர்க்கும் பெரும்போர் மூண்டது. அப்போரில் சோழப்படைகள் பல மாண்டன. ஆழ்வார் அருள்மாரியாதலால், அரசனை அழித்தற்குடன்படாமல் வாளாவிருந்தார். அதுவே ஸமயமென்று சோழவரசன் ஆழ்வாரை அணுகி 'உமது பராக்ரமத்தைக்கண்டு மகிழ்ந்தோம்; எமது இறைப்பொருளை விரைவிற் செலுத்தும்' என்று சாந்தமாகச்சொல்லி மங்கையர் கோனை மந்திரி வசமாக்கித் தான் அரண்மனையை யடைந்தான். அந்த மந்திரி இவரை மூன்றுநாள் ஓர் ஆலயத்தில் அடைப்பித்துப் பட்டினிகிடக்கும்படி செய்தான். தனது அந்தரங்க பக்தன் இவ்வாறு துயருறுவதைக்கண்ட நம்பி எம்பெருமான், ஒரு மறையோன் உருக்கொண்டு தினம் அவருக்குப்பால் கொடுத்துவந்தான். 'இதுவும் அவன தின்னருளே' எனக்கொண்டு, பரகாலன், கரிகிரி எம்பெருமானது அடிமலரை அகத்திற் கொண்டு 'கருணைவள்ளலே! உன் மாயை

விசித்ரமானது; அதை உணரவல்லாரில்லை; எத்தனைநாள் அடியேன் இச்சிறையிலிருந்து வாழ்வேன்! என்னை இதனின்றும் மீட்பதற்கு அருள்புரியவேண்டும்' என்று மனங்கசிந்து ப்ரார்த்தித்தார். அப்போது, ஸ்ரீஹஸ்திகிரியில் எழுந்தருளியுள்ள பேருளாளப்பெருமான் இவரது கனவில் தோன்றி, 'அன்ப! கவலையுறவேண்டா; உனக்கு வேண்டிய பொருள் தருகிறோம்; காஞ்சீபுரம் வா' என்று சொல்லியருளினர். அதையே நனவாகக் கொண்டு, பொழுது விடிந்ததும், மந்திரியை நோக்கி, 'காஞ்சீநகரிலே நிதி இருக்கிறது; அங்குவந்தால் தருவேன்' என்றார். அது கேட்ட அமைச்சன் இச்செய்தியை அரசனுக்கு அறிவிக்க, அரசன், 'இவனை விலங்கிட்டு அழைத்துச் செல்க' எனக் கட்டளையிட, அவ்வாறே அரசப்படைகள் ஆழ்வாரைக் காஞ்சிக்கு அழைத்துச்சென்றன. எங்குத்தேடியும் அங்கு நிதி அகப்படவில்லை. அதனால் ஆழ்வார் உளம் சோர்ந்து மூர்ச்சிக்குமளவில் அருள்மூர்த்தியான அத்திகிரீசன் மீண்டும் இவரது கனவில் எழுந்தருளி, 'வேகவதியின் தென்கரையில் ஒரு பூம்பொழிலினிடை மலர்கள் நிறைந்த புன்னைமரம் ஒன்றுண்டு; அதனடியில் அகழ்ந்துபார்த்தால் புதையல் புலனுகும்' என்று புதையல் உள்ள இடத்தைக் குறிப்பாகக் கூறி மறைந்தார். மறுநாள் ஆழ்வார் குறிப்பிட்ட அவ்விடத்தை அடைந்து பார்க்க, ஏராளமான பொருட்குவியலைக் கண்டு களிப்பின் பெருக்கில் மூழ்கிப் பகவத் ஸங்கல்பத்தின் அதிசயத்தை வியந்து, அச் செல்வத்தைக்கொண்டு அரசனுக்குச் செலுத்த வேண்டிய பகுதிப்பணத்தைச் செலுத்தி, மிகுந்த தனத்தைப் பாகவதாராதனத்துக்கு வைத்துக்கொண்டார். பொருளைப் பெற்றுக் கொண்ட அமைச்சன் மிக மகிழ்ச்சிகொண்டு ஆழ்வாரின் திறத்துக்கு வியந்து, அதனை அரசனிடம் செலுத்தி, நிகழ்ந்த வரலாறனைத்தும் நவின்றான். அதுகேட்ட சோழன் அச்சமும் அதிசயமும்கொண்டு, தான்செய்த பாவச்செயலுக்குக் கழிவிரக்கங்கொண்டு உடனே ஆழ்வாரை வரவழைத்து விசேஷமாக உபசரித்து, தான்செய்த பிழைகளைப் பொறுத்தருளுமாறு ப்ரார்த்தித்தான். தவிர: அப்பொருள் முழுவதையும், இவரைப் பட்டினி போட்ட தோஷத்துக்கு ப்ராயச்சித்தமாக ஆழ்வாரிடமே பல பாகவதர்க்கு உதவுமாறு ஸமர்ப்பித்துப் பரிசுத்தனானன். பரகாலனும் இத்ரவ்யங்களைக்கொண்டு பாகவதாராதனத்தைச் செவ்வனே நடத்திவந்தார்.

வழிபறி

நாட்கள் பல சென்றன. தம் கைப்பொருளெல்லாம் குறையலாயிற்று. இனி வழிபறித்தாகிலும் அத்தொண்டைத் தொடர்ந்து நடத்திவரவேண்டுமென்று துணிந்து முற்கூறிய தம் சீடர் நால்வரையும் துணையாகக் கொண்டு, அடியார், மடந்தையர், சிறியர், வறியர், பிணியால் நொந்தோர் எனும் இவர்களைத் தவிர்த்து, வழிச்செல்லும் ஏனையோரின் பொருளைக் கொள்ளையடித்துக் கொணர்ந்து அடியார் பூஜையை அன்புடன் நடத்திவந்தார். வழிபறிசெய்து கொள்ளையடிக்கும் தொழில் ஒரு தீச்செயலேயாயினும், அத்தனை பொருளும் பாகவதர் பொருட்டுச் செலவிடப்படுதலால், அதை ஒரு நற்செயலென்றே எம்பெருமான் திருவுள்ளம்பற்றினன். ஆதலின் ஆழ்வாருக்கு விசேஷகடாக்ஷம் பண்ணி அவரை உய்விக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றிப் பகவான் ஒரு மணவாளக் கோலங்கொண்டு ஸர்வாபரணபூஷிதனாய் லக்ஷ்மீஸமேதனாய், இவர் இருக்கும் வழியில் எழுந்தருளினன். திருமணங்கொல்லையில் ஓர் அரசமரத்தின் (போதியமரமென்று சில நூல்கள் கூறும்) மேலிருந்து ஒளிந்து பார்த்துக்கொண்டிருக்கிறார் குமுதவல்லி கொழுநர். அப்போது பரந்தாமன் பங்கயச்செல்வியை நோக்கி, 'ப்ரியே! கலியனைக் கவனி; நம் அடியாரை ஆதரிப்பதற்கு உலோபியரின் பொருளைப் பறிக்கிறான். இன்று இதுகாறும் எவரையும் காணாமையால் மனச்சோர்வுடன் காணப்படுகிறான். ஆதலின் நாம் அவனிடம் செல்வோம்'' என்று ஆழ்வாரை அணுகினன்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸத்துபதேசம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஆசார்யன்—ஆதிசேஷ தல்பத்தில் ஸ்ரீரங்கநாராயணன் எழுந்தருளியிருந்து எல்லோருக்கும் ஸேவை ஸாதித்துக்கொண்டு இருக்கிறான் என்றுசொன்னேனல்லவா! அது வைகுண்டலோகத்திலுள்ள பெரிய கோயிலின் நடுவிலுள்ள கர்ப்பக்ருஹத்தில் என்பதையும் உனக்குச் சொல்லியிருக்கிறேன். அந்த கர்ப்பக்ருஹத்தின் அழகையும் சொல்லியிருக்கிறேன். அதற்கு வெளியில் கோயிலின் அழகு எப்படி என்று உன்னுடைய கேள்வி. சொல்லுகிறேன் கவனித்துக்கேள்.

அந்த கர்ப்பக்ருஹத்தைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் காஞ்சீபுரத்தில் வரதன் ஸந்நிதியில் மலைமேல் உள்ள கர்ப்பக்ருஹத்திற்கு நான்கு பக்கங்களிலும் இருக்கிற ப்ராகாரம் போல் பெரிய அதிவிசித்ரமான அத்யாநந்தகரமான அத்யலங்க்ருதமான அத்யுந்நதமான ப்ராகாரம் இருக்கிறது. அந்த ப்ராகாரத்திலிருந்து கர்ப்பக்ருஹத்திற்குள் போவதற்கு அதிமனோஹரமான கோபுரவாசல்கள்(வழிகள்) இருக்கின்றன. அந்த கோபுரவாசல்கள் நவரத்னக் கதவுகளால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறதுகள். நாநாவித தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறதுகள். அந்த ப்ராகாரத்தின் நான்கு புறங்களிலும் நித்யஸூரிகளும் முக்தர்களும் பரமாநந்தத்தோடு உபய வேதாந்தாநுபவம் செய்துகொண்டு கோலாஹலம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இந்த ப்ராகாரத்திற்கு வெளியில் நான்கு பக்கங்களிலும் ஸஹஸ்ரஸ்தூணமண்டபங்கள் (ஆயிரக்கால் மண்டபங்கள்) இருக்கிறதுகள். இதற்குத்தான் திருமாமணிமண்டபம் என்று பெயர். இப்படிப்பட்ட அநேககோடி நவரத்ன கசிதமான ஸ்தம்பங்கள் நிறைந்ததான பெரியதான அதிமனோஹரமான திருமாமணிமண்டபத்தின் நடுவில்தான் பெரியதொரு ப்ராகாரத்தோடே கூடின கர்ப்பக்ருஹத்தில்தான் ஆதிசேஷன்மேல் எம்பெருமான் ஸ்ரீ பூ நீளாதிகளோடும் வைநதேயாதி நித்யஸூரிகளோடும் எழுந்தருளியிருப்பது கிழக்கு கோபுரவாசலில் சண்டன் ப்ரசண்டன் தெற்கு கோபுரவாசலில் பத்ரன் ஸுபத்ரன் மேற்கு கோபுரவாசலில் ஜயன் விஜயன் வடக்கு கோபுரவாசலில் தாதா விதாதா என்கிற த்வாரபாலர்கள் ஸன்னத்தர்களாக இருக்கிறார்கள். ஆயிரக்கால் மண்டம் என்று சொல்லப்பட்ட திருமாமணிமண்டபத்தில் லக்ஷ்மீகாந்தனுக்கு எதிரில் வேதஸ்வரூபனான பக்ஷிராஜன் மஹாமேருவைப்போல் அதிகம் பீரமான ஸ்வர்ணமயமான திவ்யதிருமேனியோடு எழுந்தருளியிருக்கிறார். அந்தத் திருமாமணிமண்டபத்தில் எங்கும் நித்யமுக்தர்கள் கூட்டங்கூட்டமாய் சேர்ந்து திவ்யதம்பதிகளுடைய திருக்கல்யாணகுணங்களைப் புகழ்ந்து வாதம்செய்துகொண்டு ஆநந்திக்கிறார்கள். ஒரு விசேஷம் சொல்லுகிறேன் கேள். இந்த லோகங்களில் ஆசார்யர்களாக இருந்து தங்களை ஆச்ரயித்த சிஷ்யர்களுக்கு ஜ்ஞானோபதேசம் செய்து பக்தியோகத்தை உபதேசித்தவர்களாயும் சரணாகதியை உபதேசித்தவர்களாயும் இவைகளில் ஏதேனுமொன்றை அநுஷ்டித்து முக்தியடைந்தவர்களாயும் உள்ள நம் பூர்வாசாரியர்கள் எல்லோரும் அந்தத் திருமாமணிமண்டபத்தில் ஸர்வாலங்காரபரிதர்களாய் திருவடிகளில் தண்டைச்சிலம்பு என்கிற திருவாபரணத்தினால் அலங்கரிக்கப்பட்டவர்களாய் ஆச்ரிதர்களான ஜீவகோடிகள் வைகுண்டத்திற்கு வருவதை எதிர்பார்த்துக்கொண்டு பரஸ்பரம் பகவத்குணங்களைச் சொல்லி அநுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். எல்லா ப்ராகாரங்களிலும் பெரிய பெரிய கோபுரவாசல்கள் கணக்கிடமுடியாது. திருமாமணிமண்டபத்திற்கு நான்கு பக்கங்களிலும் வாபீ கூப தடாக உத்யாநவந பகவல்லீலாமண்டபங்கள். இந்தத் திருமாமணிமண்டபத்திலுள்ள அலங்காரங்கள் வாசாமகோசரங்கள். நாநாவிதக் கிளிகள் 'ஸ்ரீரங்கநாராயணா! ஸ்வாகதம்' என்று சொல்லிக்கொண்டு இருக்கிறதுகள். நாநாவித

மயில்கள் ஆடிக்கொண்டு இருக்கிறதுகள். அதி விசித்ரமான ஹம்ஸங்கள் ஒய்யாரமாக நடை நடக்கிறதுகள். மண்டபத்தின் ஓரங்களில் அழகான ஸிம்ஹங்கள் அலங்காரமாக நின்று கொண்டு இருக்கிறதுகள். எட்டு தந்தங்களோடு கூடின பெரியபெரிய யானைகள் அலங்காரமாக நின்றுகொண்டிருக்கிறதுகள். மிகவும் கம்பீரமான புலிகள் அலங்காரமாக நின்றுகொண்டு இருக்கிறதுகள். மான் முதலிய ஜந்துக்களும், குயில் முதலிய அழகான பக்ஷிகளும் அலங்காரமாக இருக்கிறதுகள். சில இடங்களில் பாடுகிறார்கள். சில இடங்களில் அப்ஸரஸ்ஸுகள் நர்த்தனம் செய்கிறார்கள். அவ்விடத்தில உள்ள ஆச்சர்யங்களைச் சொல்லிமுடியாது. சேரயிலுக்கு வெளியில் பெரிய அநேககோடி ப்ராகாரங்கள் இருக்கிறதென்று முன்பே சொல்லியிருக்கிறேன். வீதிகள் எல்லாம் ப்ராகாரங்களுக்கு உள்ளேயிருக்கிறதுகள். ஒவ்வொரு வீதியிலும் ஆச்சரியமான தோரணங்கள். ஒவ்வொரு திருமாளிகையிலும் அத்யுந்நதமான த்வஜபடங்கள். ஒவ்வொரு வீதியிலும் விரஜாநதியிலிருந்து பிரிந்து பெரியபெரிய கால்வாய்கள் ஆச்சரியமாக ஜலம் நிறைந்ததாய் இருக்கிறதுகள். அதிகமாக நம்மால் சொல்லவும் முடியாத அவ்வளவு ஸகலஸம்பத்துகளும் ஸகல ஆச்சர்யகரமான வஸ்துக்களு நிறைந்தது ஸ்ரீவைகுண்டம். குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமனன், சங்குகர்ணன், ஸர்ப்பநேத்ரன், ஸுமுகன், ஸுப்ரதிஷ்டிதன் என்கிற எட்டு பாரிஷதர்கள் ஸேநாபதிக்கு அடுத்த உத்யோகஸ்தர்கள். தங்கள் தங்கள் ஸைந்யங்களோடு கோபுர வாசல்களிலும் வீதிகளிலும் ரக்ஷணார்த்தம் சுற்றிக்கொண்டேயிருக்கிறார்கள். அளவிட முடியாத உயரமுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் எங்குபார்த்தாலும் ஹம்ஸத்தினால் அலங்கரிக்கப்பட்ட விசித்ரமான விமானங்கள் பறந்து கொண்டிருக்கின்றன. திருமாமணிமண்டபம் முதலிய ஸகல இடங்களிலும் திவ்யமங்களவாத்ய ஒலிகள் முழங்குகின்றன. வீதிகள்மத்ஸ்யாவதாரப்பெருமாள்வீதி என்றும், கூர்மாவதாரப் பெருமாள் வீதி என்றும், வராஹப்பெருமாள் வீதி என்றும், நரஸிம்ஹப்பெருமாள் வீதி என்றும், வாமனன் வீதி என்றும், பரசுராமன் வீதி என்றும், கோதண்டராமன் வீதி என்றும், பலராமன் வீதி என்றும், கண்ணன் வீதி என்றும், பகவான் இன்னும் எவ்வளவு அவதாரங்கள் செய்திருக்கிறாரோ அந்தந்தப் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான அடையாளங்கள் உள்ள வீதிகளில் இங்கு அவதரித்து ரக்ஷணம்முடிந்து ஸ்ரீவைகுண்டத்திற்கு திரும்பி எழுந்தருளினதும் அந்தந்த திருமேனியுடன் திவ்யாலயங்கள் அத்யாச்சர்யமாக விளங்குகின்றன. இன்னும் எத்தனையோ வேடிக்கைகள்; எவ்வளவோ ஆநந்தம்; சொல்லிமுடியாது.

சிஷ்யன்—ஸ்வாமிந்! இதையெல்லாம் எப்படி நம்பமுடியும்?

ஆசா—நீ நம்பவேண்டாம், யாருக்கு என்ன நஷ்டம்?

சிஷ்—கோபித்துக்கொள்ளக்கூடாது. எப்படி நம்புவது என்றால் நம்பும்படியாக எங்களுக்குச் சொல்லவேண்டும்.

ஆசா—கோபித்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லுகிறாயே, நான் எவ்வளவு சிரமப்பட்டு வைகுண்டகத்யம் பரமபதஸோபாநம் பாஞ்சராத்ர க்ரந்தங்கள் எத்தனையோ புராணங்கள் 'ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்' 'ஜ்ஞாநாநந்தமயா லோகா:' 'தாம் நதீம் மநஸாத்யேதி' என்பது முதலான உபநிஷத் வாக்கியங்கள் எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து பெரியோர்களிடத்தில் சேட்டு நிச்சயம் செய்துகொண்டு உனக்குச் சொல்லியிருக்க, எப்படி நம்புவது என்றால் கோபம் வாராதோ.

சிஷ்—அந்த ஶாஸ்த்ரங்களைத்தான் எப்படி நம்புகிறது?

ஆசா—இவ்வளவு காலமாக நம்முடைய ஸதுபதேசத்தைக் கேட்டுக்கொண்டு வருகிறாயே அதெல்லாம் ஶாஸ்த்ரங்களை நம்பியா? நம்பாமலா?

சிஷ்—ஶாஸ்த்ரங்களை நம்பித்தான் கேட்டுக்கொண்டு வருகிறேன். இப்பொழுது எனக்கு என்ன ஸந்தேஹமென்றால் இந்த ஶாஸ்த்ரங்களை எல்லோரும் பார்த்திருப்பார்களே அவர்கள் என் வைகுண்டம் என்று ஒரு லோகம் இருப்பதாகச்சொல்லவில்லை. மேலும்

இல்லே என்றே சொல்லுகிறார்களே என்கிற ஸந்தேஹம் வந்தபடியால் இப்படிக்கேட்டேன்; ஸ்வாமிந் கோபம் வேண்டாம்.

ஆசா—உனக்கு ஒன்று சொல்லுகிறேன் கேள். அவர்கள் சொல்லுகிறார்கள் இவர்கள் சொல்லுகிறார்கள் என்றெல்லாம் கேட்காதே. இப்போது நான் வைகுண்டத்தைப் பற்றி எப்படிச் சொல்லியிருக்கிறேனே அதற்கெல்லாம் ஸரியானபடி ஶாஸ்த்ரங்கள் இருக்கிறதா? இல்லேயா? என்று கேட்டுத் தெளிந்துகொள்ளு. இதர மதஸ்தர்களுடைய கவலே உனக்கு வேண்டாம். நம் ஸம்ப்ரதாயத்தில் ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஶாஸ்த்ரஸம்மதமான ரீதியில் வைகுண்டத்தைப்பற்றி உனக்கு நான் சொன்னதில் பிசகில்லே. பூர்ணநம்பிக்கையோடு இருக்கலாம்.

சிஷ்—ஸ்ரீவைகுண்டத்தில் விஷ்வக்ஸேநர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ஆசா—அவர்தான் ஸேநாதிபதி. திவ்யமான நவரத்நகசிதமான அழகான வேத்ரத்தை (அதாவது பிரம்பை) க்கையில் வைத்துக்கொண்டு திவ்யதம்பதிகளுடைய ஆஜ்ஞையை எதிர்பார்த்துக்கொண்டு ஜாகரூகராக நின்றுகொண்டிருக்கிறார்.

சிஷ்—வைகுண்டத்திற்கு ஸைந்யங்களும் பார்ஷதர்களும் ஸேநாதிபதியும் எதற்காக?

ஆசா—வைகுண்டத்தில் உள்ள ஸைநயங்களும் அதற்குள்ள மேல் அதிகாரிகளும் எல்லோருக்கும் மேல்பட்ட விஷ்வக்ஸேநர் என்கிற ஸேநாதிபதியும் அந்த வைகுண்டம் என்கிற பெரிய ராஜ்யத்திற்கு அலங்காரமாகவே அமைக்கப்பட்டிருக்கிறார்கள். தன்னுடைய ஸங்கல்பத்தினுலேயே ஸர்வ சத்ருக்களேயும் அழிக்கவல்ல பகவானுக்கு சங்கம் சக்ரம் கதை வில்லு முதலியதுகள் எப்படி அலங்காரமாக அமைந்து இருக்கிறதுகளோ அப்படியே தான் ஸைந்யங்கள், ஆயுதங்கள், ஸேநாதிபதி எல்லாம் வைகுண்டராஜ்யத்திற்கு அலங்காரமாகத்தான் அமைக்கப்பட்டு இருப்பதாக ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறதுகள். விஸ்தாரம் பிறகு.

சிஷ்—ஸ்ரீ வைகுண்டத்தில் பக்ஷிகள் மிருகங்கள் எல்லாம் இருப்பதாகச் சொல்வது ஶாஸ்த்ரத்தை அனுஸரித்துத்தான் என்பதில் ஸந்தேஹமில்லே. ஆனாலும் அவ்விடத்தில் உள்ள நித்யஸூரிகளேப்போலும் முக்தர்களேப்போலும் அங்குள்ள பக்ஷிகளுக்கும் மிருகங்களுக்கும் ஆநந்தம் இருக்குமா என்றுதான் ஸந்தேஹம்.

ஆசா—அங்குள்ள சரீரங்களேப் பார்த்து மநுஷ்ய சரீரத்தோடு இருந்தால் ஆநந்தம் அதிகமென்றும் பக்ஷிசரீரத்தோடு இருந்தால் ஆநந்தம் குறைவு என்றும், மிருகசரீரத்தோடு இருந்தால் ஆநந்தம் ஒருமாதிரி என்றும் நினைக்கிறாய்போலிருக்கிறது. அப்படியல்ல. அங்குள்ள ஜீவாத்மாக்களில் சில ஆத்மாக்கள் நித்யஸூரிகள்; சில ஆத்மாக்கள் முக்தர்கள். இவர்கள் எல்லோரும் எந்த சரீரத்தோடு இருந்தாலும் எல்லோருக்கும் ஸமமான ஆநந்தம்தான்; வித்யாஸமே கிடையாது. பெருமாளுக்கு எவ்வளவு ஆநந்தமோ அவ்வளவு ஆநந்தம் மஹாலக்ஷ்மிக்கும் உண்டு. மஹாலக்ஷ்மிக்கு எவ்வளவு ஆநந்தமோ அவ்வளவு பூதேவி நீளாதேவிகளுக்கும் உண்டு. அதைப்போல்தான் ஸேநாதிபதியான விஷ்வக்ஸேநருக்கும் ஆநந்தம். அப்படியேதான் திவ்யதம்பதிகளான லக்ஷ்மீநாராயணர்களுக்கு ஆஸநமாயும், தல்பமாயும் இருக்கிற ஆதிசேஷனுக்கும் ஆநந்தம் ஸமம்தான். அப்படியேதான் பக்ஷிராஜனுக்கும் ஆநந்தம். இதர நித்யஸூரிகளுக்கும் முக்தர்களுக்கும் ஒரேவிதமான ஆநந்தம்தான். ஆகையால் பரமபதம் என்கிற ஸ்ரீவைகுண்டத்தில் எந்தமாதிரியான சரீரத்தோடு இருந்தாலும் எல்லோருக்கும் அளவில்லாத ஆநந்தத்தில் வித்யாஸம் கிடையாது. பலபல விதங்களான சரீரங்களே எடுத்துக்கொண்டு பகவானுக்கு கைங்கர்யம் பண்ணி ஆநந்திக்க எல்லோரும் ஆசைப்படுவார்கள். ஆனல் சில கைங்கர்யங்கள் சிலபேருக்குத்தான் எப்பொழுதும் ஸ்திரமாக உள்ளது. அதில் இதரர்கள் ஆசைப்படமாட்டார்கள். அதனாலும் ஆநந்தத்தில் யாருக்கும் எவ்விதமான குறைவும் கிடையாது. ஆகையால் ஸ்ரீமந்நாராயணன் முதல் அங்குள்ள எல்லோருக்கும் ஸமமான ஆநந்தமென்றேதான் ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறதுகள். நான் உன்னே ஒன்று கேட்கிறேன். நாம் இருக்கிற இந்த லோகத்தில் பக்ஷிசரீரத்

தோடு இருக்கிற ஆத்மாவுக்கு ஆநந்தம் அதிகமா? மநுஷ்யசரீரத்தோடு இருக்கிற ஆத்மாவுக்கு ஆநந்தம் அதிகமா? பெரியவீட்டில் வஸித்துக்கொண்டு வேண்டிய ஆஹாரங்களைச் சாப்பிட்டுக்கொண்டு பத்நீ முதலியவர்களோடு இருந்தால்தான் ஆநந்தம் என்றும் வேண்டியபடி ஸஞ்சரித்து ஆஹாரங்களைச் சாப்பிட்டு கூட்டில் அடைந்திருந்தால் ஆநந்தமில்லை என்றும் சொல்லமுடியாது. மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் ஆநந்தம் அதிகமாக இருக்கலாம் மனிதனுக்கு அவ்வளவு இல்லாமலும் இருக்கலாம். ஆகையால் ஆநந்தத்திற்குக் காரணம் சரீரமல்ல. அந்தந்த ஆத்மாக்கள் பண்ணியிருக்கிற புண்யங்களே காரணங்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. அம்மாதிரியில் பக்திப்ரபத்திரூபமான ஸமமான புண்யங்களைச்செய்து முக்தியடைந்தவர்களுக்கு அவர்கள் எந்த சரீரத்தோடு இருந்தாலும் ஆநந்தத்தில் தாரதம்யம் கிடையாது.

பக்திப்ரபத்திரூபபுண்யகார்யங்களால் ஸகல பாபங்களும் போய்விடுகிறபடியால் நமக்கு ஏற்பட்ட பரமாநந்தம் பகவானுடையவும் லக்ஷ்மியினுடையவும் அநுக்ரஹத்தால் வந்துவிடுகிறது. ஆகையால் சரீரம் வெவ்வேறாக இருந்தால் ஆநந்தத்தில் வித்யாஸம் வந்துவிடுமோ என்று எண்ணாதே. அவ்விடத்தில் உள்ள கிளிக்கும் பெருமாளுக்கும் ஒரேமாதிரியான ஸமமான ஆநந்தம்தான்.

சிஷ்–மிகவும் ஸரிதான் என்று தோன்றுகிறது. இவ்விடத்தில்போல் அங்கும் ஜாதி பேதம் உண்டோ?

ஆசா–கிடையாது. எல்லோரும் ஒரே ஜாதிதான். அதாவது:— ஸ்ரீமந்நாராயண சேஷபூதர்கள் என்கிற ஒரே ஜாதிதான்.

சிஷ்– அவ்விடத்தில் பசுக்கள் இருக்கிறதுகளா?

ஆசா–பெரியஸந்தேஹம்வந்துவிட்டதோ? சொல்லுகிறேன் கேள். உயர்ந்த மங்களகரமான வஸ்துக்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவும் ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கிறதுகள். ஸந்தேஹப்படாதே. ஒரே ச்லோகத்தை நினைத்துக்கொள் அநேக ஸந்தேஹம் போய்விடும். அதாவது:— ‘**வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி꞉ | ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்பாகவதைஸ்ஸஹ** ||’ என்கிறதுதான்.

ஸ்ரீ꞉

தேவனைப்பாடும் தீந்தமிழ் வல்லார்

—○—

ஒருபொருளைப் பார்க்கும்போது, அப்பொருளின் மூலகாரணமும், அத்துடன்ஸம்பந்தப்பட்ட பொருள்களும் காண்பவர் சிந்தனைக்குத் தோன்றுவது உலகவியற்கை. மேலும், காண்பவர் தாம் ஆர்வத்தோடு தேடிவந்தபொருளை ஆநந்தமும் ஆச்சரியமும் கரைபுரண்டோடும்படி கண்ணாரக் காணும்போதோ இத்தகைய நிலைக்கு எல்லையே யில்லை. அதனிலும், லோகோஜ்ஜீவநார்த்தமாக வெழுந்தருளிய மஹான்களாகிய ஆழ்வார்கள் ஸர்வேச்வரனைத் திவ்ய தேசந்தோறும் தேடிச்சென்று அப்பரம்பொருளை நெஞ்சார நினைந்து, கண்ணாரக்கண்டு, வாயாரப் புகழ்ந்து நிற்கும்போது அவர்களுடைய சிந்தநாசக்திக்கும், உபமாநமாகத் தோன்றும் ஆச்சரியங்களுக்கும் ஓர் எல்லை யாராயவது காணலாகுமோ? அத்துடன் அவர்கள் தங்களது அநுபவத்தைத் தமது தெய்வீக மணங்கமழும் அமுதச் சொல் நிரம்பிய பாசுரங்களில் அழகிய சித்திரமாகத் தீட்டி, ஊழியினிறுதியினும் அழியாமல் நின்று பின்புள்ளார்க்கும் எல்லையற்ற வாநந்தத்தை யளிக்கும்படி யருளிச்செய்திருக்கிறார்கள். அவ்வண்ணம் வாய்ந்த ஒரு மஹாநுபாவனுடைய அநுபவமொன்றை மேலே நோக்குவோம்.

ஸர்வேச்வரன் பக்கலில் ஸார்வார்த்தக்ரஹணம்பண்ணின கூறுதற்கரிய வீறுபெற்ற கலி

யன் பரமன் எழுந்தருளிய திவ்யதேசந்தோறும் எழுந்தருளி மங்களாசாஸநம் செய்து கொண்டும், நாடெங்குந்திரிந்து கைம்மாறு கருதாது மழைபொழிந்து வரும் கார்மேகம்போலத் தமது அமுதப்பெருக்கெடுத்த சொன்மாலைகளை அங்கங்கே வாரி வழங்கிக்கொண்டும் வருகிறார். திருவட்டபுயகரம் (அஷ்டபுஜம்) என்று தொண்டைநாட்டின்கண் விளங்கும் திருப்பதிக்கெழுந்தருளும்போது. அவரால் தேடிவரப்பட்ட வெம்பெருமான் தானே முந்திக்கொண்டு எதிர்ப்பட்டு ஸேவை ஸாதிக்கிறார். கண்டார் ஆழ்வார். விசாலமான தடமார்பும், மலையையொத்த திருத்தோள்களும், அவைகளில் தனிச் சோபையுடன் அலங்காரமாகத் திகழும் பஞ்சதிவ்யாயுதங்களும், தன்னுடைய ஸர்வசக்தத்வமும், திருக்கமலபாதங்களில் அணிந்த வீரக்கழலும், மிடுக்கும், பெருமிதமும் தோன்ற பகவான், வந்து நிற்கிறார். அத்துடன் பல அவதாரங்களில் புரிந்த வீரச்செயல்களும் வந்து எதிரே தோன்றுகின்றன கலியனுக்கு. உடனே 'வெந்திறல் வீரரில் வீரரொப்பார்' என்கிறார் ஆழ்வார். மிகமிகக் கடுமையான பராக்ரமம் உள்ள வீரர்களுக்குள்ளே வீரன் யாவனோ அவனையொத்திருக்கிறது இத்திருவுருவம். அன்றியும் யாவரும் மிக விரும்பும் வீரம் மிக்குடையோர்களில் சிறந்த வீரம் உள்ளவன் என்றும் பொருள்படக் கூறுகிறார். இவ்விடத்தில்நரஸிம்ஹம், பரசுராமன், ஸ்ரீராமன் முதலிய அவதாரங்களுடைய தீரச்செயல்கள் ஆழ்வார் கண்களுக்கு இலக்காகின்றன. மற்றும் அநேக தேவாதிதேவர்களும், பூசுரர்களாகிய ப்ராஹ்மணர்களும் வேதங்களைச் சொல்லித் துதித்த வண்ணம் வணங்கிக் கொண்டே நாற்புறமும் சூழ்ந்திருக்கின்றனர். இன்னும் திவ்யப்பிரபந்தங்களைப் பண்ணிசையில் பாடிக்கொண்டே பல பாகவதர்களும் சூழ்ந்து வணங்கிக்கொண்டே யிருக்கின்றனர். அதை ஸேவித்த கலியன், 'வேதமுரைத்திமையோர் வணங்கும் செந்தமிழ்பாடுவார் தாம் வணங்குந் தேவர் இவர் கொல்,' என்கிறார். செந்தமிழைப் பாடுவோர் செம்மையாகவும் பாடுகிறார்கள். அவர்களுடைய பெருமையை யளவிட்டுப் பார்க்கிறார் கலியன்: தேவர்களனைவரும் வேதகானத்துடன் வணங்கும் பெருமை பெற்றவர்கள் செந்தமிழ்பாடுவார் என்கிறார். தவிரவும் யாவருக்கும் யாவற்றுக்கும் முதன்முதலில் தமிழில் பாட்டுக்கள் அருளிச்செய்த பாட்டுக்கு உரிய பழையவராகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய விம்மூவரும் தம்மை எப்போதும் ஏத்திவணங்கும் தேவர்கள், நித்யமுக்தர்கள்புடைசூழ நின்று இந்த வெம்பெருமானைப் பாடித் துதிக்கிறார்கள் என்ற கருத்தையும் நமக்குத் தெளிவிக்கிறார் கலியன். அவர்கள் பாடும் செந்தமிழ் இமையோரையும் வணங்கும்படி செய்கிறதாம். இப்படிப்பட்ட அநிதரஸாதாரணமான மஹிமை வாய்ந்த வெம்பெருமான் பரமஸௌலப்யனாகத் தனக்கெதிரே வலியவந்து ஸேவை ஸாதிக்கிறாரே என்ற வியப்புத்தோன்ற 'தேவர் இவர் கொல்' என்கிறார். இவரைத் தரிசித்த பின்பு தமது ஊனுமுயிரும் தம்வசத்திலில்லையென உணர்கிறார். உடனே 'தரிக்கமாட்டேன்' என்கிறார். இவன் இன்று தமக்கெதிரே வந்து தம்மை வசப்படுத்தி யாட்கொண்ட தன்மையை உன்னியுணர்ந்துருகுகிறார். அன்றொருகால் மஹாபலியின் யாகத்தில் வாமநரூபத்துடன் எழுந்தருளி அம்மன்னனை வஞ்சித்து நெஞ்சுருக்கி யடி மூன்றிரந்து பெற்று உலகமனைத்தையும் அளந்துவாழ்வித்ததுபோலல்லவா யிருக்கிறது இது? அன்றியும் அவ்வெம்பெருமான் திருக்கோவலூரில் எழுந்தருளியிருந்துகொண்டு செந்தமிழில் இன்கவிபாடும் பரமகவிகளாகிய முதலாழ்வார் மூவரையும் தன்பக்கல் வரவழைத்து நள்ளிரவில் நெருக்கியும், ஸேவைஸாதித்தும் அவர்கள் திருவாக்கினால் பாடல்பெற்று மகிழ்ந்ததுபோலவன்றோ இவனும் இன்று இங்கு செந்தமிழ்பாடுவோரிடம் பாடல் பெற்று மகிழ்வது? என்று வியந்து மகிழ்கிறார் கலியன். உடனே 'வந்து குறளுருவாய் நிமிர்ந்து மாவலிவேள்வியில் மண்ணளந்த அந்தணர்போன்றிவர்' என்கிறார். இவ்விடத்தில் கலியன், அந்தணன் என்கிற பெயருக்கேற்ப உலகை வாழ்விக்கும் மஹாகருணாநிதியாகிய வெம்பெருமான் வாமனாவதாரத்தில் அந்தணர்குலத்தில் தோன்றினான் என்பதை நினைந்து அநுபவிக்கிறார். அந்தஸமயத்தில் இந்த வெம்பெருமானுடைய பெருமை எத்தன்மையது, இவன் யாவன் என்ற வியப்பும்,

திகைப்பும் அடைந்த கலியன் 'ஆர்கொல்' என்கிறார். ஆர்கொல் என்று கேட்டவர் ஸாமான்யமானவரா? திருவஷ்டாக்ஷரத்தின் பெருமையை யுள்ளபடியறிந்து அதனை உலகினுக்குக வியவரல்லவா? பாகவதசேஷத்வத்தைப் பரக்க நிரூபித்தவரல்லவா? இன்னமுதச் சொன் மாரிபொழியும் அருள்மாரியல்லவா? அவர் கேட்டால் புல்லும் பொங்கியெழுந்து பதிலுரைக்கும். கல்லுங்கசிந்துருகிப் பேசுமே! அப்படியிருக்க அண்டசராசரங்களைப்படைத்துக் காத்துண்டுமிழ்பவனும், அணுவினும் அணுவாய்க் கரந்துந்தோன்றியும் நிற்கும் பரம்பொருள் தான்தேடிவந்த மஹாநுபாவன் 'ஆர்கொல்' என்று தன்னைக் கேட்டால், விடை சொல்லத் தயங்குவானோ? ஆழ்வார் கேட்காமலிருந்தாலும் ஊர், பெயர், விலாஸங்களைக் கொடுக்கக்கூடிய ஆவலுள்ளவனன்றோ அவன்? ஆழ்வார் 'ஆர்கொல்' என்று கேட்டதுதான் தாமதம். 'அட்டபுயகரத்தேன்' என்றான் என்னப்பனெம்பெருமான். 'நான் அஷ்டபுஜங்களையுடையவன். இந்த அஷ்டபுஜமென்னும் திவ்யஸ்தலத்தி லுறைபவன்' என்கிறான். என்னே ஆழ்வாரின் பக்தி! என்னே யெம்பிரானின் ஸௌலப்யம்!! திருமங்கையாழ்வாரின் அநுபவம் நிறைந்த அப் பாசுரம் வருமாறு:-

'வெந்திறல் வீரரில் வீரரொப்பார்
வேதமுரைத்திமையோர்வணங்கும்
செந்தமிழ் பாடுவார் தாம்வணங்கும்
தேவரிவர்கோல் அறிக்கமாட்டேன்
வந்து குறளுருவாய் நிமிர்ந்து
மாவலிவேள்வியில் மண்ணளந்த
அந்தணர்போன்றிவரார்கோலென்ன
அட்டபுயகரத்தேனென்றாரே'
(பெரியதிருமொழி 2-8-2)

ஸ்ரீ:

ஸ்ரீ மாலோலவித்வத்ஸபா

ப்ரஹ்லாதரக்ஷணோத்தஸம்ப்ரமவர்த்திதவைபவா: ।
ஜயந்தி க்ஷபிதாரிஷ்டம் ஹரேரத்புதகேளய: ॥ (1)

[ப்ரஹ்லாதரக்ஷணத்தில் உண்டான அதிகத்வரையால் மிகவும் வ்ருத்தியடைந்த லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஆச்சர்யலீலைகள் ஒருவிதக்குறைவுமின்றி உலகில் விளங்கக்கடவன.]

லக்ஷ்மீந்ருஸிம்ஹபதபங்கஜஸேவநைகநிஷ்டம் ததாமிதகுணம் வதாந்யம் ।
ஸத்பாத்ரதாநநிரதம் ஸம்ப்ரதாயஸம்ரக்ஷகம் ஆதிஶடகோபயதீந்த்ரம் ஶரணம் ப்ரபத்யே ॥

[ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவடித்தாமரையை ஸேவிப்பதிலேயே ஈடுபட்டவராயும், அபரிமிதகுணங்களையுடையவராயும், ஸத்பாத்ரத்திலே தானம்பண்ணி ஸத்ஸம்ப்ரதாயத்தைக் காப்பற்றினவராயுமுள்ள ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனை சரணடைகிறேன்.]

தஸ்யைவ ஹந்த! தயயா க்ருபயாவதீர்ணௌ ஸ்ரீயாமுநாயதிராஜவதுல்லஸந்தௌ ।
ஸ்ரீரங்கநாதஶடகோபயதீந்த்ரஸ்ரீவீரராகவஶடாரிமுநீ ச பாவயாமி ॥

[அந்த ஸ்வாமியினுடைய க்ருபையினால் அவதீர்ணர்களான ஆளவந்தார் பாஷ்யகாரரைப்போல் ப்ரகாசிக்கின்ற ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனையும், ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகனையும் த்யானம் செய்கிறேன்.]

𑌭𑌕𑍍𑌤𑌾𑌵𑌨𑌾𑌯 𑌨𑍃𑌹𑌰𑌿𑌰𑍍𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌵𑌤𑌾𑌰𑍋 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑌶𑌿𑌪𑍁𑌂 𑌵𑌿𑌬𑍁-
𑌧𑌾𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌨𑌾𑌯 𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑌖𑌿𑌲𑌾𑌵𑌨𑌾𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌯𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌮𑌹𑌿𑌤𑍇 𑌯𑌦-
𑌹𑍋𑌬𑌿𑌲𑍇𑌽𑌰𑍍𑌚𑍍𑌯𑌃 ॥ (4)

[எந்த ந்ருஸிம்ஹன் தன்னுடைய பக்தனை ரக்ஷிப்பதற்காக இவ்வுலகில் அவதரித்து, விரோதியான ஹிரண்யகசிபுவை ஸம்ஹரித்தாரோ, அந்த பகவான் எல்லாப்ராணிகளையும் காப்பாற்றுவதற்காக பெரியோர்களால் கொண்டாடப்பட்ட அஹோபிலத்தில் அர்ச்சாரூபியாய் ஆவிர்பவித்தார்.]

𑌤𑌤𑍍𑌰𑌾𑌽𑌰𑍍𑌚𑌿𑌤𑍋 𑌮𑍁𑌨𑌿𑌗𑌣𑍈𑌸𑍍𑌸𑍁𑌚𑌿𑌰𑌾𑌦𑌥 𑌶𑍍𑌰𑍀𑌵𑌣𑍍𑌶𑌠𑌾𑌰𑌿𑌯𑌤𑌿𑌵𑌰𑍍𑌯𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌚𑌨𑍋𑌽𑌯𑌮𑍍 ।
𑌕𑍍𑌷𑍇𑌮𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌜𑌗𑌤𑌾𑌮𑌿𑌹 𑌯𑌾𑌤𑌿 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌹𑍍𑌯𑌹𑍋𑌬𑌿𑌲𑌂 𑌸𑌞𑍍𑌚𑌰𑌿𑌤𑍁𑌂 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌸𑍍𑌪𑌦𑍋𑌽𑌭𑌵𑌦𑌯𑌮𑍍 ॥ (5)

[அந்த பகவான் அநேக மஹர்ஷிகளால் வெகுகாலம் ஆராதிக்கப்பட்டு, பிறகு ஆதிவண் ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனால் ஆராதிதராய் லோகக்ஷேமத்திற்காக அந்த அஹோபிலத்திலிருந்து புறப்பட்டு வெளியில் ஸஞ்சரிக்கத் திருவுள்ளங்கொண்டவராய் ஸ்வப்நத்தில் தெரிவித்தார்.]

𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌨𑌾𑌰𑌹𑌰𑌿𑌭𑌾𑌵𑌮𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌧𑍀𑌰𑌸𑍍𑌸𑍍𑌵𑍀𑌯𑌂 𑌤𑌦𑍀𑌪𑍍𑌸𑌿𑌤𑌮𑌵𑌾𑌪𑌯𑌤𑍍𑌸𑌃 ।
𑌤𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑌵𑌂𑌶𑌕𑍃𑌤𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑌾𑌰𑍍𑌚𑌨𑍇𑌨 𑌸𑍋𑌽𑌯𑌂 𑌮𑌹𑌤𑍀𑌂 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌂 𑌸𑍍𑌰𑌿𑌯𑌂 𑌸𑌃 ॥

[தன்னால் ஆராதிக்கப்பட்ட ந்ருஸிம்ஹனுடைய திருவுள்ளத்தையநுஸரித்து அதன் படியே பகவானுடைய மனோரதத்தை அந்த ஸ்வாமி பூர்த்திசெய்தார். பிறகு காலக்ரமத்தில் அவருடைய சிஷ்யபரம்பரையால் விசேஷ ஆராதநம் கண்டருளி மஹைச்வர்யத்தை அடைந்தார்.]

𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯 𑌯𑍇 𑌨𑌿𑌖𑌿𑌲𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌰𑌹𑌸𑍍𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑌨𑍍𑌤𑌗𑍂𑌢𑌵𑌰𑌸𑌾𑌰𑌵𑌿𑌦𑌾𑌂 𑌗𑌣𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌃 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌶𑌠𑌜𑌿𑌦𑍍𑌯𑌤𑌿𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍃𑌤𑌿𑌰𑌿𑌹 𑌭𑌾𑌗𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌲𑌭𑍍𑌯𑌾 ॥ (7)

[அந்த பரம்பரையில் ஸர்வ ஶாஸ்த்ர ரஹஸ்யங்களையும் வேதாந்தத்தில் நிகூடமான ஸாராம்சத்தையும் நன்கு அறிந்தவரான ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபனெனும் யதிசக்ரவர்த்தி தத்காலம் ஆஸ்தாநத்தையலங்கரிப்பது இவ்வுலகத்தின் பாக்யவிசேஷமே.]

𑌤𑍇 𑌤𑌾𑌵𑌦𑌤𑍍𑌰 𑌚𑌿𑌰𑌕𑌾𑌲𑌮𑌨𑍋𑌰𑌥𑌸𑍍𑌥𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌭𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌮𑌨𑌿𑌶𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌭𑍂𑌯𑌃 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑍀𑌠𑌂 𑌸𑍁𑌵𑌿𑌤𑌤𑌾𑌂 𑌵𑌰𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌶𑌾𑌲𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑌭𑌾𑌂 𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌂 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑍍𑌯
𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 ॥ (8)

[அந்த ஸ்ரீ அழகியசிங்கர் தகுந்தகாலத்தில் ஜாகரூகராய் வித்யையை அபிவ்ருத்திசெய்யும்விஷயத்தில் தனக்கு சிரகாலமாக மனோரதத்திலிருந்த வித்யாப்யாஸத்திற்கு அநுகுண்மான பெரிய பாடசாலையையும் பெரிய பண்டிதஸபையையும் ஏற்படுத்தி விளங்குகிறார்.]

𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌰𑌚𑌿𑌤𑌾𑌸𑍍𑌸𑍁𑌕𑌵𑌯𑌃 𑌸𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍈𑌃 𑌶𑍁𑌕𑍍𑌰𑌾𑌰𑌕𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑌮𑌾𑌃 ।
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌸𑌮𑍈𑌰𑍍𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂 𑌸𑌮𑍂𑌹𑍈𑌃 𑌗𑍍𑌰𑌹𑍈𑌕𑌵𑌣𑌨𑌗𑌣𑌾𑌨𑍍𑌨𑌹-
𑌤𑍋𑌽𑌤𑌿𑌶𑍇𑌤𑍇 ॥ (9)

[இந்த ஸ்ரீ அழகியசிங்கரால் ஏற்படுத்தப்பட்ட உயர்ந்த கவிகளாலும் ப்ருஹஸ்பதிக்குச் சமமான வித்வான்களாலும் விளங்குகிற இந்த வித்வத்ஸபையானது (ஸூர்யன் சுக்ரன்

ப்ருஹஸ்பதி கல்பவ்ருக்ஷம் இவர்களால் விளங்குகிற) ஸ்வர்கத்தில் மஹேந்த்ரனல் கொண்டாடப்பட்ட ஸுதர்மாவென்கிற தேவஸபையைக்காட்டிலும் ஸர்வகாலத்திலும் உத்தமமான வேதாந்தவிசாரத்திலேயே ஈடுபடுகிற குணவிசேஷத்தால் சிறந்து விளங்குகிறது.]

ஸந்தோஷார்தாய கேவலம் ப்ரஹ்மவித்யாவிமர்சகாநாம் பண்டிதாநாம் ।
ஸம்பாவநம் அந்யோந்யதாரதம்யரஹிதம் ஸ்வாமிந: ஔதார்யம் ॥ (10)

[இந்தஸபையில் கேவலம் ஸந்தோஷார்த்தமாக ப்ரஹ்மவித்யா திவிசாரம் பண்ணுகிற பண்டிதர்களுக்கு பகவன்முகோல்லாஸார்த்தமாகவே பரஸ்பரம் தாரதம்யமன்றிக்கே ஸம்பாவனை செய்வது ஸ்வாமியின் ஓர் ஔதார்யவிசேஷமே.]

உபர்யுபரி புத்திவைசத்யார்த்திபி: வித்யார்த்திபி: வாதம் காரயித்வா ।
வித்வத்துல்யம் பஹுமாநம் ஸ்வாமிந: மஹோதாரஸ்வபாவம் ॥ (11)

[வித்யார்த்திகளுக்கு மேன்மேலும் புத்தி வைசத்யத்தைக்கோரி அவர்களைக்கொண்டு வாக்யார்த்தங்களைச் செய்வித்து பெரிய வித்வான்களுக்கு துல்யமாக பஹுமானம்பண்ணுவதும் ஓர் மஹோதாரஸ்வபாவமே.]

பஹுஸம்பாவநாபி: ஸந்தர்பிதா: ஸபாமாகதா: பூஸுரா: ।
தர்மஸூநோ: ராஜஸூயே இவ சாஸ்த்ரவிசாரம் குர்வந்தி ॥ (12)

[இந்த ஸபைக்கு வந்த பூதேவர்கள் விசேஷ ததீயாராதனை ஸம்பாவனைகளால் த்ருப்திபண்ணப்பட்டவர்களாய் தர்மபுத்ரருடைய ராஜஸூயயாகத்தில்போல சாஸ்த்ரவிசாரம் செய்கிறார்கள்.]

மஹாமூல்யரத்நமயே டோலாயாம் ப்ரபோ: உத்ஸவே ।
ஸுவர்ணரஜதாங்கிதபோஜநாயாம் ஸபாயாம் ॥ (13)

ஸ்ரீ ந்ருஸிம்ஹ: மந்த்ராக்ஷதை: ப்ரீதிபூர்வம் ।
விதீயமாநம் பரிதோஷிதாநாம் விதுஷாம் ஸம்பாவநம் ॥ (14)

[விலையில்லாத நாநாரத்நமயமான ஊஞ்சலில் கண்ணன் உத்ஸவங்கண்டருளும்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர் மந்த்ராக்ஷதைபுரஸ்ஸரமாக வித்வான்களை அநுக்ரஹித்து ஸம்பாவனை பண்ணும் க்ரமமானது மனத்தை ஆகர்ஷிக்கிறது.]

ஸபாயாம் ஆநுஷங்கிகம் பகவத்பாகவதஸேவநம் ।
வித்வத்பி: லப்யதே மஹத் ॥ (15)

[இந்த ஸபையில் வருகிற வித்வான்களுக்கு ஆநுஷங்கிகமாக பகவத், பாகவத ஸேவை கிடைப்பது பெரிய விசேஷம்.]

அந்யோந்யஸம்வாதரஸ: பரோக்தவிசேஷார்த்தபோத: ।
சாஸ்த்ரவித்வத்கோஷ்ட்யாம் வாக்யார்த்தஸாமர்த்யம் ॥ (16)

[இங்கு ஒருவர்க்கொருவர் நடக்கக்கூடிய வாதரஸாநுபவமும், பிறர் சொல்லுகிற விசேஷார்த்தங்களைத் தெரிந்துகொள்வதும், பெரிய வித்வத்கோஷ்டியில் வாக்யார்த்தம் சொல்லக்கூடிய சக்தியும் இந்த ஸபையால் ஏற்படுகிறது.]

𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑌪𑌿 𑌵𑌿𑌨𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 𑌸𑌾𑌮𑍍𑌯𑌂 𑌗𑍁𑌰𑍋𑌃 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌹𑌰𑍇𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍 ।
𑌮𑍂𑌕𑌾 𑌅𑌪𑌿 𑌵𑌾𑌗𑍍𑌮𑌿𑌸𑌭𑌾𑌕𑌮𑍍𑌪𑌵𑌨𑍍𑌤𑍋 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌸𑌭𑌯𑌾𑌨𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍁 ॥

[க்ரமேண பகவானுடைய திருவருளால் மிதஜ்ஞன் ப்ருஹஸ்பதிக்குச் சமமாகவும், ஊமையும் வாக்மியாகவும், ஸபாகம்பமுடையவன் தகுந்த தைர்யசாலியாகவும் இந்த ஸபையினால் ஆகிறார்கள்.]

𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌮𑍁𑌖𑍍𑌯𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍍𑌥𑌲𑌾𑌨𑍀𑌤𑌸𑍁𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑌾𑌃 ।
𑌮𑌾𑌲𑍋𑌲𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌸𑌮𑍀𑌪𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌗𑌾𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌲𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 ॥ (18)

[ஸ்ரீரங்கம், காஞ்சி, திருப்பதி முதலான திவ்யதேச மடங்களிலிருந்து வந்த பரிவட்டம் புஷ்பம் முதலான பஹுமாநங்கள் லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஸமீபத்தில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருமேனியில் ஸமர்ப்பிக்கப்பட்டு ப்ரகாசிக்கின்றன.]

𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌯𑌤𑌿𑌵𑌰𑍍𑌯𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌂𑌵𑌰𑍍𑌧𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌹𑌰𑍇𑌸𑍍𑌸𑌭𑍇𑌯𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌭𑌾𑌕𑍍 𑌸𑌜𑍍𑌜𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌵𑌿𑌭𑌾𑌤𑍁 𑌵𑌿𑌬𑍁𑌧𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾 ॥ (19)

[இந்த மாலோலஸபையானது இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களாலும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு மேன்மேலும் வித்வஜ்ஜந ஸம்ருத்தமாய் சந்த்ர சூர்யர்கள் உள்ளவரை விளங்க வேண்டும்.]

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌵𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑌗𑍍𑌰𑍍𑌯𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌾𑌰𑍍𑌯𑌪𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍇𑌨 ।
𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑌾𑌸𑍇𑌨 𑌕𑍃𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌃 𑌮𑌾𑌲𑍋𑌲𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑌦𑌸𑌃 𑌸𑍍𑌤𑌵𑍋𑌽𑌯𑌮𑍍 ॥ (20)

[திருமலைநம்பி வம்சத்தில் அவதரித்தவராயும் வித்வதக்ரகண்யராயுமுள்ள ஸ்ரீ ந்ருஸிம்ஹதாததேசிகன் திருவடியை ஆச்ரயித்த ஸ்ரீக்ருஷ்ணதாஸனால் செய்யப்பட்ட இந்த ஸ்ரீ மாலோல வித்வத்ஸபையின் ஸ்தோத்ரம் ப்ரகாசிக்கவேண்டியது.]

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ அழகியசிங்கர்களின் திருநக்ஷத்ர மஹோத்ஸவங்கள்

ஸ்ரீரங்கம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் நூருவது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் கர-ஞு மார்கழி-மீ 10௳ விசாகநக்ஷத்ரத்தில் ஸ்ரீரங்கம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் மிகவும் விமர்சையாக நடந்தது. அச்சமயம் ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல் ஸம்ஸ்க்ருத உபாத்யாயர், மோஹனூர், சிரோமணி, கோபாலாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கர் ஸம்ப்ரதாயத்திற்கும் மற்றுமுள்ள ஜனங்களுக்கும் செய்துள்ள மஹோபகாரங்களைப்பற்றி மிகவும் அழகாக உபந்யாஸம் செய்தார்.

தாஸன்
ராமஸ்வாமி.

தேரழுந்தூர்

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமஸபை

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் தேரழுந்தூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் கம் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமஸபையாரால் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது சில ஆஸ்திகர்கள் ஸ்ரீ அழகியசிங்க

ரின் குணதிசயங்களைப்பற்றி உபந்யஸித்தார்கள்.

இந்த ஸபையில் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகியசிங்கர்களுடையவும் ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடாதிபதிகளான சங்கராசார்யருடையவும் நியானத்தின்பேரில் சென்ற நான்கு வருஷங்களாக ப்ரதிவர்ஷம் ஸ்ரீவைகுண்டஏகாதசி புண்யதினகாலத்தில் நடத்திவருகிற 'அகண்ட ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமபாராயணமஹாயஜ்ஞத்தின்' ஐந்தாவது வர்ஷ வைபவம் சென்ற 7-1-52 திங்கட்கிழமை காலை6மணிக்கு கடப்ரதிஷ்டையுடன் உபக்ரமிக்கப்பட்டது. இந்த பாராயண மஹாயஜ்ஞம் 24-மணி அவகாசமும் இடைவிடாது நடந்து த்வாதசியன்று காலை திருவீதிப்ரதக்ஷிணமானதும் கடதீர்த்த ப்ரோக்ஷண ப்ராசநாதிகள் செய்தபிறகு யஜ்ஞம் பூர்த்தியடைந்தது. ஸ்ரீமடாதிபதிகளிடமிருந்தும் வைதிக லௌகிக ப்ரபுக்களிடமிருந்துப் வந்திருந்த ஆசிச்செய்திகள் கார்யதர்சியால் வாசிக்கப்பட்டு ஸபை இனிது முடிவடைந்தது.

கிடாம்பி ஆர். லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்
காரியதரிசி.

ஸ்ரீ ப்ரஸந்ந வேங்கடேச ஸபா
பாதூர்

பாதூர் அக்ரஹாரத்தில் ஆஸ்திக்யாபிவ்ருத்திக்காக ஷ ஸபையானது ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. இச்சபையோரால் சிறுவர்களுக்கு ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம், ஸ்தோத்ர பாடங்கள், திவ்யப்ரபந்தம் முதலியன போதிக்கப்பட்டு வருகின்றன. இச்சபையார் பூர்வாசார்யர்களுடைய திருநக்ஷத்ராதிகளையும் ஆஸ்திக்யம் தழைத்தோங்க உபந்யாஸாதிகளையும் நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

கரஹ்ஸ மார்கழிமீ 27வ ஸ்ரீ அஹோபிலமடம் 36-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகனது வர்ஷாராதநமஹோத்ஸவம் ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ருந்தாவநத்தில் பண்ணுருட்டி ஸ்ரீ. உப. கா. பார்த்தஸாரதி அய்யங்காரால் 2-நாள் முன்னதாகவே பாராயணாதிகளுடன் உபக்ரமிக்கப்பட்டு வீதிஉத்ஸவத்துடன் நடத்தி வைக்கப்பட்டது. அன்று ஸ்ரீ. கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் விசேஷ ததீயாராதனம் பண்ணிவைத்தார்.

43-வது பட்டம் ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகனது திருநக்ஷத்ரமஹோத்ஸவம் நன்கு கொண்டாடப்பட்டது.

இச்சபையினரால் ஸ்ரீ அஹோபிலமடம் 40, 41 -வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்களுடைய திருநக்ஷத்ரமஹோத்ஸவங்கள் மிக விமரிசையுடன் கொண்டாடப்பட்டன.

கரஹ்ஸ தைமீ 13வ அஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் 73-வது திருநக்ஷத்ரமஹோத்ஸவம் வழக்கப்படி வீதி உத்ஸவத்துடனும் விசேஷததீயாராதனத்துடனும் கொண்டாடப்பட்டது. இந்த ஸபை மேன் மேலும் அபிவ்ருத்தியடைந்து நம் ஸம்ப்ரதாயம் செழித்துவளர ஸ்ரீமாலோலனும் ஸ்ரீ அழகியசிங்கர்களும் அநுக்ரஹிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

பாதூர், தூப்புல், வா. ராஜகோபாலதாஸன்.

பண்ணுருட்டி ஸ்ரீமஹாராதநம்.

ஸ்ரீ அஹோபிலமடம் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் 29-வது வார்ஷிகமஹாராதனமஹோத்ஸவம் வழக்கம்போல் பண்ணுருட்டி அக்ரஹாரவீதியில் ஸ்ரீ. பார்த்தஸாரதி அய்யங்கார் க்ருஹத்தில் 22-1-52 செவ்வாய்க்கிழமை காலையில் வேதபாராயண, அத்யாபகங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு மூன்றுவது நாள் வீதி உத்ஸவம் சாத்துமுறையுடன் 3தினங்கள் மிகவும் விசேஷமாய் நடத்தப்பட்டது. ஸ்ரீமான்கள், ஈ. தி. ஸ்ரீநிவாஸாசாரியர், 'கீதோதயம்' என்பதுபற்றியும், குண்டலம், வி. ரங்காசாரியர் 'வேதமஹிமை' என்பதுபற்றியும், ஆசுகவி வில்லூர், நடாதூர், ஸ்ரீநிவாஸராகவாசாரியர் 'ஆசார்யவைபவம்' என்பதுபற்றியும், திருவையாறு எஸ். டி. ஸ்ரீநிவாஸாசாரியர் 'விபீஷண சரணாகதி' என்பதுபற்றியும், மேட்டுத்தெரு ஸ்ரீநிவாஸராகவாசாரியர் 'ஸ்ரீந்ருஸிம்ஹப்ரபாவம்' என்பதுபற்றியும் உபந்யஸித்தார்கள். அநேக இடங்களிலிருந்து பல ஆஸ்திகர்கள் வந்திருந்தனர். மூன்று தினங்களும் விசேஷ ததீயாராதனம் நடந்தது. த்வாதசியன்று ஸ்ரீ மங்கலம், ராமாநுஜ அய்யங்காரால் ததீயாராதனம் செய்விக்கப்பட்டது. வித்வான்களுக்கும், பா

ராயணகைங்கர்யம் செய்த ஸ்வாமிகளுக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரஸாதரூபமாய் ஸம்பாவனைகள் செய்விக்கப்பட்டு மஹோத்ஸவம் இனிது முடிந்தது.

பரவஸ்து, R. சக்ரபாணி அய்யங்கார்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை
கல்கத்தா

ஷை ஸபையின் ஆதரவில் ஸ்ரீ. உப. ராமாயணபூஷணம், கதாரத்நாகர, வித்வான், வடுவூர், வங்கீபுரம் க்ருஷ்ணமாசார்யஸ்வாமி இவ்விடம் ஒருமாஸகாலமாய் எழுந்தருளியிருந்து எல்லோரும் ரஸிக்கும்படி ஸ்ரீமஹாபாரதம், ஸ்ரீபாகவதம் இவைகளில் முக்யமான அம்சங்களை எடுத்து உபந்யஸித்தார்.

இந்தஸபை இம்மாதிரி விசேஷங்களை அடிக்கடி நடத்திவரும்படி சரண்யன் அநுக்ரஹிக்க வேண்டும்.

வாங்கல், ந. நாராயணன்.
ஏ. ரங்காச்சாரி.
கார்யதர்சிகள்.

41-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

இந்த மஹோத்ஸவம் ஸ்ரீ அழகியசிங்கரின் அவதாரஸ்தலமாகிய காரைக்குருச்சியில் கர௵ மார்கழி௴ 18௳ (2-1-52)யன்று வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இம் மஹோத்ஸவத்திற்கு வெளியிடங்களிலிருந்து அநேக சிஷ்யர்கள் வந்திருந்தார்கள். அன்று ஸேவாகாலம், சாற்றுமுறை, விசேஷ ததீயாராதநம் முதலானவை வெகுவிமர்சையாகச் செய்துவைக்கப்பட்டது. சந்தனம் தாம்பூலம், தேங்காய் முதலியவை தக்ஷிணையுடன் ஸ்ரீ. உப. கோடநல்லூர், டாக்டர், S. N. ரங்காசார்யரால் விநியோகிக்கப்பட்டு இனிது முடிவடைந்தது.

கண்ணன் என்கிற
ஆ. க்ருஷ்ணமாச்சாரி.

ஸ்ரீ கல்யாணாபிவர்த்திநீ ஸபா

ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.

ஷை ஸபையானது *19-8-51* ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்குக் கலாசாலை ப்ரார்த்தநாமண்டபத்தில் இக் கலாசாலையின் கௌரவாத்யக்ஷர் ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, (M.A., L.T.,) தலைமையில் கூடிற்று.

அவ்வமயம் இவ்வருஷத்திற்கு D. கிருஷ்ணமாசாரி, K. N. விஜயராகவன், என்னும் சிரோமணி வித்யார்த்திகளைக் கார்யதர்சிகளாகவும், P. S. நரஸிம்ஹன், j. சேஷாத்ரி இவர்களை ஆலோசகர்களாகவும் தேர்ந்தெடுத்தார்கள்.

பிறகு நடந்த ஸபையின் கார்ய க்ரமங்கள்

தேதி	அத்யக்ஷர்	உபந்யாஸகர்	விஷயம்
17-11-51	ராவ்பஹதூர் ஸ்ரீ. உப. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி (ரிடையர்ட் டிப்டிகலெக்டர்)		வித்யார்த்திகளின் கடமை.
12-12-51	ஸ்ரீ. உப. T. ராமஸ்வாமிஐயங்கார் ஸ்வாமி M.A., L.T., [ஸ்ரீகோஷ்டீபுரம் ஸ்வாமி திருநக்ஷத்ரம்]		ஆசார்யகுணவைபவம்.
21-12-51	,, M. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி	D. கிருஷ்ணமாச்சாரி	'உச்ச்ரயதிஜந்மதி ஸம்ருத்தி யத:' [illegible]
25-12-51	,, M. S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி		ஆசார்ய மஹிமை.

[ஸ்ரீ அஹோபிலமடம் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்]

29-12-51 ஸ்ரீ. உப. P. N. ராகவாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கரின் குணாதிசயம்.

[ஸ்ரீ அஹோபிலமடம் **43**-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்]

2—1—52 ஸ்ரீ. உப. தோ. வேணுகோபாலாசார்ய ஸ்வாமி ஆசார்ய ப்ரபாவம்.

[ஸ்ரீ அஹோபிலமடம் **41**-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்]

ஸபையின் கார்யதர்சியின் தந்யவாதத்திற்குப் பிறகு ஸபை இனிது முடிவடைந்தது.

D. கிருஷ்ணமாச்சாரி.
K. N. விஜயராகவன்.
கார்யதர்சிகள்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கர௵ பங்குனி௴ 1952௵ மார்ச்-ஏப்ரல்௴

[உத்தராயணம்-சிசிர ருது மீன-௴]

14—3—52	1௳	வெள்ளிக்கிழமை	...	மீனக்ருஷ்ண த்ருதீயை திதி.
20—3—52	7௳	வியாழக்கிழமை	...	நவமி-தசமி திதித்வயம்.
22—3—52	9௳	சனிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
25—3—52	12௳	செவ்வாய்க்கிழமை	...	● ஸர்வ அமாவாஸ்யை.
4—4—52	22௳	வெள்ளிக்கிழமை	...	ஸ்ரீஸந்நிதி ஸ்ரீராமநவமி.
6—4—52	24௳	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
7—4—52	25௳	திங்கட்கிழமை	...	த்ரயோதசி திதி.
8—4—52	26௳	செவ்வாய்க்கிழமை	...	சதுர்தசி திதி. பங்குனி உத்திரம்.
9—4—52	27௳	புதன்கிழமை	...	○ பௌர்ணமி திதி.
10—4—52	28௳	வியாழக்கிழமை	...	ப்ரதமை திதி.
11—4—52	29௳	வெள்ளிக்கிழமை	...	மீனக்ருஷ்ண த்விதீயை திதி.
12—4—52	30௳	சனிக்கிழமை	...	சூன்யதிதி, மேஷ ரவி 57-55 (மறுநாள் ஸங்க்ரமண தர்ப்பணம்)

கர௵ மாசி௴ 13௳ திங்கட்கிழமை ஸம்பவிக்கும் ஸூர்யக்ரஹணம் தென்னாட்டில் தெரியாது என்றும் பம்பாய் முதலியவிடங்களில் (நெல்லூருக்கு வடக்கில்) தெரியும் என்றிருக்கிறது. தெரியாது என்கிறவிடங்களில் தர்பணம் முதலியவை கிடையாது.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ மாலோல வித்வத்ஸபையின்

11-வது வார்ஷிக மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபிலமடம் 42வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்' என்கிறபடி ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளப்படி ஸ்ரீபாஷ்யத்தை ப்ரவர்த்திப்பித்தல் என்கிற கைங்கர்யத்தை ஓங்கி வளர்த்துக்கொண்டுவருவது உலகமறிந்ததே. இப்படி நடந்துவரும் இந்த ஸபையின் பதிஞோராவது வார்ஷிக ஸதஸ் ஆரம்பத்திலும் ஸ்ரீ அழகியசிங்கரால் வழக்கம்போல் ஸபை ஏற்படுத்திய நோக்கத்தைப் பற்றியும், ஸ்ரீபாஷ்யத்தின் பெருமையைப்பற்றியும், ஸ்ரீபாஷ்யகாரரின் வைபவத்தைப்பற்றியும், பகவத்பாகவத ஆராதநங்கள் நடக்கவேண்டிய க்ரமங்களைப்பற்றியும் உபந்யஸிக்கப்பட்டு ஸபையானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'ஹஸ்தாவலம்போ நோ ஹ்யேகோ பக்திக்ரீதோ ஜநார்த்தந:' [பக்தியினாலே க்ரயம் வாங்கப்பட்ட பகவான் அனைவருக்கும் கை கொடுத்து உதவுபவர்.] என்று சொல்லியிருக்கிற பகவானையும், 'குத்ருஷ்டிகுஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண: கரக்ரஹவிசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோऽயம் முநி:' [இந்த ராமாநுஜன் என்கிற யதிராஜன் குத்ருஷ்டிகளுடைய வஞ்சனையில் விழுகிற பரப்ரஹ்மத்திற்கு கைதூக்கி விடுவதில் அத்யந்தம் ஸமர்த்தராக விளங்குகிறார்] என்றபடி கைதூக்கி விட்ட பெருமையுள்ளவர் ஸ்ரீபாஷ்யகாரர். 'ந சேத் ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ । காமவஸ்தாம் ப்ரபத்ஸ்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருஶா: ॥' [இந்த ஸமர்த்தமான ராமாநுஜன் என்கிற நான்கு எழுத்துக்கள் இல்லாவிடில் என்னைப்போன்ற ஜந்துக்கள் எந்த அவஸ்தையை அடையுங்களோ?] என்றும் அவர் பெருமை சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்வாமி தேசிகனும் யதிராஜ ஸப்ததியில் 'ஶுசிநா தவநாதிஶாயிஸூக்திநா யதிராஜேந நிபந்தநாயகஶ்ரீ: । மஹதீ குருபங்க்திஹாரயஷ்டி: விபுதாநாம் ஹ்ருதயங்கமா விபாதி ॥' என்று குருபரம்பரையின் நடுநாயகமாக ஸ்ரீபாஷ்யகாரரை வர்ணித்தார். ப்ரஸித்த ஸூர்யன் ஸத்குணத்தை அபஹரித்தும் ப்ராக்ருதமான தாமரஸபுஷ்பத்தை பகலில் மாத்ரம் விகஸிக்கச்செய்தும் ஜனங்களுக்குத் தாபத்தை உண்டுபண்ணியும் ராஹுவினால் பீடிக்கப்பட்டும் உதயாஸ்தமயதோஷங்களை உடையவனாயுமிருக்கிறான். அதுபோலன்றிக்கே ராமாநுஜதிவாகரன் 'ராமோ விக்ரஹவாந் தர்ம:', 'க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்' என்றபடி ஸித்ததர்மமான பகவானாகிற தாமரஸ புஷ்பத்திற்கு எப்போதும் விகாஸத்தை உண்டுபண்ணியும் பாபமாகிற இருளைப் போக்கியும் பூமியில் அவதரித்தும் ஜனங்களின் தாபத்ரயங்களைப் போக்கியும் விசேஷ ப்ரபாவங்களை உடைய ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகள் இவ்வளவு ரஸவத்துக்களாகவும், பெருமை பெற்றதுகளாகவும் இருப்பதாலேயன்றோ ஸ்வாமி தேசிகனும் 'த்ரிம்ஶத்வாரம் ஶ்ராவிதஶாரீரகபாஷ்ய:' என்றும் 'ஸூக்தாநி ஸந்தி யதிராஜ ஸரஸ்வதீவ' என்றும் கொண்டாடியிருக்கிறார்.

இப்படி ஸ்ரீபாஷ்யத்தினுடைய ப்ரசாரமானது அநேகவிதமாக நடத்தப்பட்டு வருகிறது. ஸ்ரீபாஷ்யகாரர் நியமித்த கைங்கர்யங்களிலே 'ஸ்ரீபாஷ்யத்தை ப்ரவர்த்திப்பித்தல்' ப்ரதானமாக விளங்குகிறது. நம் ஸித்தாந்தத்தில் அநேக வித்வான்கள் காலக்ஷேபமுகேந இந்த கைங்கர்யத்தை நடத்திவந்திருக்கிறார்கள். காலக்ஷேபமாத்ரத்தினாலன்றிக்கே இப்படிப்பட்ட பெரிய ஸதஸ்ஸைக் கூட்டி, இந்த ஸதஸ்ஸில் ஸ்ரீபாஷ்யாதிகரணங்களின் விஷயங்களைச் சொல்லச்செய்தும், பூர்வபக்ஷஸித்தாந்தரூபவாக்யார்த்தங்களைச் செய்வித்தும் ஸதஸ்ஸை நடத்திவருவது நம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஏற்பட்ட

தனி ஏற்றமாகும்.

'[illegible] கலௌ' என்று கலியுக தெய்வமாகக் கொண்டாடப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸித்தாந்தத்தைத் தழைத்தோங்கும்படி வளர்க்கத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீபாஷ்யகாரரை [illegible] [ஸ்ரீ பாஷ்யகாரரே மறுபடியும் பாஷ்யப்ரவசநம் செய்ய ஆசைப்பட்டு பூமியில் ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகனாக அவதரித்தார்] என்றபடி ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனாக அவதரிப்பித்தும் அவருக்கு ஆச்ரமஸ்வீகாராதிகளைப் பண்ணிவைத்தும் இந்த திவ்யாஸ்தாநபரம்பரையை அபிவ்ருத்தி பண்ணியிருக்கிறான். இந்த பரம்பரையில் வந்த எல்லா அழகியசிங்கர்கள் மூலமாகவும் ஸ்ரீபாஷ்யாதிப்ரவசநங்களை அவிச்சின்னமாக, மிகவும் விலக்ஷணமாக நடத்திவருகிறான். நம் அழகியசிங்கர் இதுவரை பதினேரு தடவை ஸச்சிஷ்யர்களுக்கு க்ரந்தசதுஷ்டய காலக்ஷேபம் ஸாதித்திருக்கிறார். அப்படிப்பட்ட சிஷ்யர்களும் நன்கு சிக்ஷிக்கப்பட்டு ஆங்காங்கு ப்ரஸித்தர்களாக விளங்கிவருகிறார்கள். ஸ்ரீமாலோல வித்வத்ஸபையும் ஆரம்பிக்கப்பட்டு பதினேரு வருஷங்கள் வ்யதீதா: என்கிற கணக்கில் வருகிறது. மேல்மேலும் விசேஷமாக நடந்துவருகிறது. '[illegible]' என்கிறபடி ஸபையில் பண்டிதர்களை விஷயம் சொல்லச்சொல்லி அதில், விஷயசோதநங்கள் பண்ணி, ஆநந்தாநுபவம்பண்ணியதை நேரில் பார்த்தவர்கள் ஸ்ரீதேசிகனே ஸேவைஸாதிப்பதுபோலவே எண்ணினார்கள். இந்த ஸதஸ்ஸானது இரண்டு வேளைகளிலும் இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்கள் முன்னிலையில் மிகவும் விசேஷமாக நடைபெற்றது. இந்த மஹோத்ஸவகாலத்தில் ப்ரஹ்மவித்துக்களான அநேக மஹான்கள் எழுந்தருளி ஸேவைஸாதித்ததை பார்த்தவர்களுக்கு 'கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்' என்றபடி நேத்ராநந்தமும், வாக்யார்த்தங்களையும் உபந்யாஸங்களையும் கேட்டவர்களுக்கு தேன்மாரி பொழிந்தாற்போலவும் ஏற்பட்ட ஆநந்தாநுபவங்களும் பலவுண்டு.

இப்படி நடைபெற்ற இந்த ஸபையானது ஸ்ரீ அழகியசிங்கருடைய திருநக்ஷத்ர தினத்தன்று பூர்த்தியாயிற்று. இதற்கென நாநா தேசங்களிலிருந்து அநேக சிஷ்யர்கள் வந்திருந்தனர். விசேஷததீயாராதநம் நடைபெற்றது. ஸ்ரீ அஹோபிலம், புள்ளம்பூதங்குடி முதலிய திவ்யதேசத் தெம்பெருமான்களுடையவும், ஸ்ரீ அஹோபிலமடங்களிலிருந்தும் வந்திருந்த திருமாலை திருப்பரிவட்டங்கள் டோலோத்ஸவகாலத்தில் ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு சாத்தப்பட்டன. ஸ்ரீகண்ணன் ரத்நமயமான டோலையில் அத்யாச்சர்யமாக ஸேவை ஸாதித்தார். டோலோத்ஸவத்தின்போது வித்வான்களுக்கு ஸம்பாவனை பண்ணப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்காரால் இந்த ஸதஸ் நன்றாக நடந்துவரவேணுமென்று ஸ்ரீந்ருஸிம்ஹன் அநுக்ரஹிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கப்பட்டது.

இவ்வருஷமும் அநேக லக்ஷணகனபாடிகள் வந்திருந்தார்கள் அவர்களுக்கும் ஸம்பாவனை செய்யப்பட்டது.

பிறகு எல்லோருக்கும் பலமந்த்ராக்ஷதை அநுக்ரஹிக்கப்பட்டு இந்த ஸதஸ்ஸும் ஸ்ரீ அழகியசிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் இனிது முடிந்தது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

பொரzஙு:ஶுவிஶ்வ ஜஜ வாவுதிரம் ஶுஸ்தாம்
ஸஞ்ஜீவயந்த்யவிலக்ஷ்யார: ஸ்வயாந்ரா।
சந்த்ராம் த்வஹஸ்தவராணஶ்ரவணகவமாரீந
ப்ராணாஞரோ ஶமவதே வராஹாய தஸ்மை॥

ஸ்ரீ மாலோல வித்வத்ஸதஸ்ஸின் 11-வது வார்ஷிகமஹோத்ஸவமும் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவமும் வழக்கம்போல் சிறப்பாக இவ்வருஷமும் திருவள்ளூரில் நடந்தேறின. ஜலக்கஷ்டம் பெரியதாயிருந்தும் இம்மஹோத்ஸவங்களுக்கு அநேக ஆஸ்திகர்களும், பண்டிதர்களும் விசேஷமாக வந்திருந்ததைப் பார்த்தவர்கள் மனத்தில் நமது ப்ராசீந ஸம்ப்ரதாயம் இக்கலியிலும் இக்காலத்திலும் உலகில் நிலைநின்று ஸாக்ருதிகளுக்கு உஜ்ஜீவநஹேதுவாயிருக்குமென்ற நம்பிக்கையை ஸ்திரப்படுத்தியிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை.

ஸதஸ்ஸில் அந்வயித்தவரனைவருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் பரமக்ருபையுடனும், ஸந்தோஷத்துடனும் வித்யாஸமில்லாமல் ஸம்மாநதிகளை அநுக்ரஹித்தது ஸ்ரீ அழகியசிங்கரது சிறந்த ஒளதார்யத்தையும் நம் ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் அதிலும் முக்யமாக ஸ்ரீபாஷ்யத்தில் பரிசயம் பெறுவதற்கு அதிகாரமுள்ளவர்களனைவரும் அப்பரிசயம் பெற முயலவேண்டுமென்கிற கவலையையும் காட்டுகிறது. இக்காலத்தில் ப்ராசீநரீதியில் ஸம்ஸ்க்ருத வித்யையைப் பயிலுவதே வெகுவாகக் குறைந்துவருகிறது. சிலர் ஸம்ஸ்க்ருத வித்யாப்யாஸத்திலிறங்கினாலும் சாஸ்த்ராந்தரங்களில் பரிசயம் உண்டானதும் தேஹயாத்ரையை உத்தேசித்து வ்ருத்தியைத் தேடவேண்டியவர்களாயிருக்கிறார்கள். எனவே வேதாந்தத்தில் ஐயந்திரிபற்ற ஜ்ஞானத்தையும் தைர்யமாக வாக்யார்த்தம் சொல்லி ஸித்தாந்தார்த்த ஸ்தாபநம் செய்யும் சக்தியையும் முக்யமாகக்கொண்டு வேதாந்தாப்யாஸம் செய்பவர்கள் இல்லையென்றே சொல்லும் நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை மாறி அப்படிப்பட்ட உத்தமாதிகாரிகள் நம் ஸம்ப்ரதாயத்தில் பலர் இருந்து அவர்கள் எல்லாரும் வேதாந்த பாரங்கதராயிருக்கவேண்டுமென்றே ஸ்ரீ அழகியசிங்கரின் அபிஸந்தி. எனவே ஸதஸ்ஸில் அந்வயித்த வித்யார்த்திகளும், இளமையுள்ள பண்டிதர்களும் மேன்மேலும் வேதாந்தத்தில் பரிச்ரமப்பட்டு இன்னும் தேர்ச்சிபெற்று அடுத்த வார்ஷிகமஹோத்ஸவத்தில் இன்னும் ஆயிரமடங்காக ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுள்ளமுகக்கும்படி செய்து அநுக்ரஹபாத்திரர்களாகிக் களிக்கவேண்டுமென்று ப்rார்த்திக்கிறோம்.

சந்தா பாக்கி

சில சந்தாதார்களிடமிருந்து பல வருஷக் கணக்காக சந்தா பாக்கி வரவேண்டியிருக்கிறதைப் பார்க்க மிகவும் வருத்தமாயிருக்கிறது. பத்ரிகையின் நியமப்படி சந்தாத்தொகை முன்னதாகவே செலுத்தப்படவேண்டியிருந்தும் பழைய சந்தாதார்கள் சந்தாவை பாக்கியில்லாமல் நிச்சயமாய் அனுப்பிவைப்பார்கள் என்று எதிர்பார்த்து எல்லோருக்கும் பத்ரிகை அனுப்பப்பட்டுவருகிறது. அதிக பாக்கியுள்ளவர்களுக்கு விஜ்ஞாபநம் அனுப்பப்பட்டதில் சிலர் பாக்கியை க்ருபையுடன் அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் சிலரிடமிருந்து வரவேண்டியிருக்கிறது. அவர்கள் உடனேயே பாக்கியை அனுப்பிவைக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். மார்ச்சு-மீ 15-ல் இரண்டு வருஷத்துக்கு மேல்பட்ட சந்தா பாக்கியுள்ளவர்களுக்கு அம்மாத ஸஞ்சிகையை வி, பி. பியில் அனுப்புவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வி. பி. பி. யில் அனுப்பினால் வீண் செலவும் சிரமமும் ஏற்படுமாதலால் அப்படிச் செய்யும்படி நேரிடாமல் சந்தாதார்கள் க்ருபை செய்து உடனேயே சந்தாபாக்கியை அனுப்பிவைக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சந்தா வரவு: 1952-ம் ஞு ஜனவரி மீ.

சந்தா எண்		பெயரும் விலாஸமும்	வருஷம்	தொகை ரூ	அ
8	ஸ்ரீ	எஸ். ராகவாசாரி, தாதர், பம்பாய்.	52	3	0
11	,,	வி. கே. ராகவாசார்யர், மாதுங்கா, பம்பாய்,	51-52	6	0
12	,,	ஆர். ஸ்ரீநிவாஸன், பம்பாய்.	48-51	12	0
13	,,	எஸ். சாரங்கபாணி ஐயங்கார், பம்பாய்.	52	3	0
14	,,	என். எஸ். சாரி, பம்பாய்.	52	3	0
32	,,	பி. எஸ். திருமலை ஐயங்கார், விருதுநகர்.	52-53	6	0
33	,,	எம். ஆர். ரங்கஸ்வாமி ஐயங்கார், மன்னார்குடி.	49 51	9	0
40	,,	ஸி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கும்பகோணம்.	51-52	6	0
44	,,	எஸ். ரங்கஸ்வாமி ஐயங்கார், விழுப்புரம்.	52	3	0
51	,,	எஸ். கிருஷ்ணமாசார்யர், பம்பாய்.	48-51	10	0
67	,,	டி. எஸ். பிச்சு ஐயங்கார், திருக்குருங்குடி.	52	3	0
71	,,	எஸ். ஸௌந்தரராஜ ஐயங்கார், புத்தூர்.	52	3	0
91	,,	டி. எஸ். சேஷாத்ரி ஐயங்கார், தில்லைஸ்தானம்.	50-51	5	0
132	,,	டி. ராமாநுஜ ஐயங்கார், திருநெல்வேலி.	52	3	0
175	,,	பி. கே. குப்புஸ்வாமி ஐயங்கார், மதராஸ்.	52	3	0
230	,,	கே. பார்த்தஸாரதி, பம்பாய்.	52	3	0
234	,,	வி. டி. வேதாந்தராமாநுஜாசார்யர், பூந்தமல்லி.	52	3	0
235	,,	கே. ஸ்ரீநிவாஸராகவன், கும்பகோணம்.	48-49	5	0
249	,,	எல். ஸி. ஸுந்தரவரதாசார்யர், சித்தூர்.	52	3	0
287	,,	எஸ். என். வெங்கடேச ஐயங்கார், கோயம்பத்தூர்.	51	3	0
290	,,	டி. ஏ. ராஜகோபால ஐயங்கார், மன்னார்குடி.	52	3	0
294	,,	ஐ. ஸ்ரீநிவாஸாசாரியர், மதருஸ்.	52	3	0
374	,,	வி. ரங்கஸ்வாமி, தூத்துக்குடி.	50-51	6	0
393	,,	எஸ். ராகவ ஐயங்கார், ஸ்ரீரங்கம்,	52	3	0
414	,,	கே. டி. ராஜகோபால ஐயங்கார், சிதம்பரம்.	52	3	0
483	,,	வி. ராமஸ்வாமி ஐயங்கார், புகலூர்.	52	3	0
613	,,	எஸ். ஆர். கிருஷ்ணய்யர், பொள்ளாச்சி.	51-52	6	0
631	,,	டி. கோபாலாசார்யர், Gabi Bero P. O.	*52*	*3*	*0*
644	ஸ்ரீமதி	ப. சக்ரவர்த்தி ராஜம்மாள், காவேரிப்பாக்கம்.	52	1	8
675	ஸ்ரீ	கே. ஜீ. ஸந்தானம் ஐயங்கார், கும்பகோணம்.	52	3	0
676	,,	கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஈரோட்.	52	3	0

ஆக ரூ— *132 8*

19953°

		முன் பக்கப்படி ரூ—		132	8
687	,,	ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், நாகப்பட்டிணம்.	51	3	0
702	,,	கே. எஸ். ராகவாசார்யர், ஜீ. டி. மதராஸ்.	52	3	0
703	,,	வி. பி. நாராயணன், புதுடில்லி.	51	3	0
728	,,	கே. ராமஸ்வாமி ஐயங்கார், மல்லேஸ்வரம்.	50–51	5	0
767	,,	டி. ராஜகோபாலன், திருவஹீந்திரபுரம்.	51	3	0
775	,,	பி. ஆர். கோபாலஸ்வாமி ஐயங்கார், பஞ்சமாதேவி.	52	3	0
780	,,	ஆர். ஆர். வீரராகவ ஐயங்கார். கும்பகோணம்.	51	3	0
787	,,	கே. தேசிகாசார்யர், மாதுங்கா, பம்பாய்.	51	3	0
811	,,	கே. என். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், திருவத்தூர்.	51	3	0
816	,,	பி. டி. நரஸிம்ஹாசார்யர், காஞ்சீபுரம்.	49-50	3	0
844	,,	திருமலை ஐயங்கார், அழகர்கோயில்.	51-52	3	0
853	,,	கே. பி. விஜயராகவாசார்யர், தாம்பரம்.	52	3	0
889	,,	ஆர். எஸ். தாதாசார்யர், ஸ்ரீரங்கம்.	52	3	0
890	,,	கே. ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீரங்கம்.	52	3	0
899	,,	வி. ஸௌந்தரராஜ ஐயங்கார், காரைக்குடி.	52	3	0
981	,,	எம். எஸ். ஆர். ஐயங்கார், தஞ்சாவூர்.	52	3	0
983	,,	கே. வீரராகவாசாரி, மயிலாப்பூர்.	52	3	0
998	,,	எல். ராஜகோபாலன், கும்பகோணம்.	52	3	0
1073	,,	ஆர். கண்ணன் ஐயங்கார், கும்பகோணம்.	51	3	0
1077	,,	எச். நாராண ஐயங்கார், பெங்களூர்.	52	3	0
1079	,,	என். ஜீ. கே. சாரி, நீர்வளூர்.	52	3	0
1082	,,	எஸ். ரங்கநாதன், தி. நகர், மதராஸ்.	52	3	0
1083	,,	டி. ராமஸ்வாமி ஐயங்கார், திருப்பூர்.	52	3	0
1091	,,	கே. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார், மதராஸ்,	52	3	0
1099	ஸ்ரீமதி	கமலத்தம்மாள், கும்பகோணம்,	52	3	0
1142	ஸ்ரீ	கே. எஸ். தாதாசார்யர், ஆரணி.	52	3	0
1172	,,	என். ஸ்ரீநிவாஸாசாரி, வேலூர்.	51	3	0
1196	,,	கோவிந்தராஜ ஐயங்கார், செங்குருச்சி.	52	3	0
1201	,,	பி. டி. ராமஸ்வாமி ஐயங்கார்.	52	3	0
1202	,,	ஜீ. கிருஷ்ணமாசார்யர், தெல்லாகுளம்.	51	3	0
		ஆகரு—		224	8

Regd. No. M.4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபிலமடத்தில் அச்சிடப்பெற்ற கீழ்க்கண்ட புஸ்தகங்கள்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன

			ரூ. அ. பை.
1.	அதிகரண ஸாராவளி [தேவநாகரலிபி சிந்தாமணி வ்யாக்யாநத்துடன் கூடியது]	...	6—8—0
	ஷை காலிகோ பயிண்ட் செய்தது.	...	7—5—0
2.	உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டாமீமாம்ஸாச [க்ரந்தலிபி]	...	1—0—0
3.	ந்யாஸ நிர்ணயம் ,,	...	0-12—0
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாளவ்யாக்யாநம் ,,	...	1—8—0
5.	ஸ்ரீவீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் ,,	...	0—4—0
6.	ஆஹ்நிகம் ,,	...	1—0—0
7.	ஸந்த்யாவந்தந பாஷ்யம் மணிப்ரவாளவ்யாக்யாநம் [நாகரலிபி]	...	0-12—0
8,	சாற்றுமுறை புஸ்தகம்	...	0-12—0
9.	தனியன் புஸ்தகம்	...	0—6—0
10.	காமாஸிகாஷ்டகம் & வேகாஸேதுஸ்தோத்ரம் (தமிழ் வ்யாக்யாநத்துடன்)	...	0—6—0

(தபால் செலவு வேறு)

கிடைக்குமிடம்

ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.

Printed by J. RANGACHARIAR, Srikaryam, Sri Ahobila Mutt, at Malola Press, 30, Panagal Street, Tiruvallore.
Edited and Published by P. S. SrinivasaDesikachariar, M.A., B.L., No, 2, Audiyappa Mudali Street, Vepery, Madras 7.